அண்ணு சாவு! கவிஞரின் கற்பனை!

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 3 | 31-5-'63 | வெள்ளி | கதிர் - 11-12

கண்ணதாசரின் போக்கு! சிறை செல்லத் தயாரா நீர்?

எத்தனைநாளைக்கு இந்தகாங்கிரஸ்?

"காங்கிரசைக் கட்டிக் காப்போம்!", என்று கர்ச்சிக்கும் குணுளர்களைக் காணும் போது, பரிதாபமே உருவாகிறது நமக்கு! முக்கிய தலைவரான பண்டித நேரு அவர்களே 'எத்தனை நாளைக்கு இந்தக் காங்கிரஸ்?' என்று கவலைப்பட வேண்டிய அளவுக்கு நிலைமைகள் வளர்ந்துகொண்டுள்ளன!!

இந்தியைச் சர்க்கார் மொழியாக்கு!—என்று வடநாட்டு காங்கிரஸ்காரர்கள் பிடிவாதம் செய்கிருர்கள்.

ஐயோ! வேண்டாம்!!-என்று தென்னுட்டுக் காங்கிரஸ்காரர்கள், சோகக்குரல் எழுப்புகிருர்கள்.

வடநாட்டுக்காரர்களைத் திருப்தி செய்யாவிட்டால் ஜனசங்கம், பி. சோ. போன்ற கட்சிகளுக்குச் செல்வாக்கு வந்துவிடுமே என்று வடநாட்டுக் காங்கிரஸ்காரர்கள் பயப்படுகிருர்கள்.

தென்னுட்டு மக்களின் நியாயமான கோரிக்கைகளை மதிக்காவிட்டால் தி. மு. க, வளர்ந்துவிடுமே என்று தென்னுட்டுக் காமராசர்கள் அஞ்சுகிருர்கள்.

பண்டித நேரு அவர்கள் இந்தி மொழி ஆட்சி மசோதாவின் போது சொன்னசொல்லை மறந்ததுபோல் பாவித்தார், வடவர்களுக்காக.

சொன்ன சொல்லை மறவாததுபோலக் காட்டிக் கொண்டார் தென்னவர்களுக்காக,

மொழிப் பிரச்சினையில் குழப்பமான நிலை! அவருக்கும் காங்கிரசுக்கும்.

ஒரு உண்மை விளங்குகிறது. தென்னுட்டுக்கும் வடநாட்டுகருமுள்ள பேதங்களையும் பிளவுகளையும், 'சிமெண்ட்' போட்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இன்று காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இரண்டுங்கெட்டான் நிலையில் எத்தனை நாளைக்கு அக்கட்சி இருக்க முடியும்? மொழி பிரச்னையில் தேசிய ஆரவாரம் தென்பட்ட போது, 'இந்தி அரசு மொழி'யென முடிவு செய்யப் பட்டது. தெற்கு எதிர்க்கின்றது இன்று. வடக்கு வாகை சூடத் துடிக்கிறது!!

வடக்கு! தெற்கு!! என்கிற வேற்றுமை, பளிச்சிட்டு விட்டது. காமராசர் கர்ச்சிக்கிருரே ஒழிய, தனிப்பட்டமுறையில் அவரது கட்சிக்காரர்களிடம் பேசினுல், "இந்திச் சட்டம் எங்களுக்கும் பிடிக்கவில்லை சார்! எப்படி சார் நம் பிள்ளைகள் இந்தியைப் படிக்க முடியும்?", என்கிருர்கள். சட்டமன்றத்தில் ஈரோட்டைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.எல்,ஏ., சொன்னர், "என் பிள்ளைகளைக் கூப்பிட்டு இந்தி படிக்கிறீர்களா? என்று கேட்டேன், நான் படிக்கலே! எனக்குப் பிடிக்கலேன்னு சொன்னுன்", என்பதாக. உள்ள நிலை, இது!

நாளைக்கு உத்தியோகங்களுக்கு சான்சு மேல் சான்சு அடிக்கும்போது, இந்தியில்லாத வாலிபர்கள் குமுறத்தானே செய்வார்கள்? அப்போது எவ்வளவுதான் காங்கிரஸ் முயற்சித்தாலும் அந்தக் குமுறலைத் தடுக்கவா முடியும்!!

எப்படிப் பார்த்தாலும் காங்கிரஸ் இன்று ஒரு இக்கட்டான நிலையில் உள்ளது. எதிர்காலம் அதற்குத் தெளிவாகயில்லை.

°° °° °°

வடக்கு தெற்கு பேத மட்டுமல்லகாங்கிரசைவாழவைக்கக் கூடிய தலைவர்கள் யார் இருக்குருர்கள் பண்டித நேருவுக்குப் பிறகு மொரார்ஜி தேசாயால் முடியுமா! சஞ்சீய்வயா சமாளிப்பாரா! காமராசர் முட்டுக்

(11-ம் பக்கம் பார்க்க)

"கண்ணதாசன், சுரதா, முடியரசன் என்றெல்லாம் புதுப்புதுக் கவிஞர்கள் வளர்ந்துள்ளார்கள். இவர்களையெல்லாம், இச்சமயம், நான் குறிப்பிடாவிட்டால் தமிழறிந்தவனுக மாட்டேன்!", என்று அண்மையில் சென்னையில் நடைபெற்ற நமது தோழர் வேழவேந்தன் கவிதை வெளியீட்டு விழாவில், அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மறுநாளே தன்னுடைய ஏட்டில் கவிஞர் கண்ணதாசன், "என்னைப் பற்றி அண்ணுத்துரை குறிப்பிட்டாரென்ருல், என்னை அவர் விடமுடியாது. அந்தளவுக்கு இன்றைய தினம் வளர்ந்து விட்டேன்", என்று பொருள் தொனிக்க எழுதினுர்.

மாற்ருன் தோட்டத்து மல்லிகையென்ருலும் மணக்கும் என்பதுஅண்ணுவின் பண்பாடு! மாற்ருரா, அவர்களை மரியாதைக் குறைவாக அழைத்து அதன்மூலம் தன்னைப் பெரிய மனிதனுக்கிக் கொள்ளும் பண்பாடுள்ளவர்களும் உண்டு என்பதை த. தே. க. உருவான போது நாடு கண்டது!!

அமைதியோடு 'புகழ்' பெறுகின்றவர்களும் உண்டு; உடுக்கடிச்சப்தம்எழுப்புவதன்மூலம் புகழ் தேடுகின்றவர்களும் உண்டு. சொல்லாமல் மணக்கும் மல்லிகை! 'நான் மல்லிகை மல்லிகை! என்னைப் பார்!' என்று காகிதமல்லி கர்ச்சிக்கும்!!

கவிஞர் கண்ணதாசனே எழுதியிருக்கிருர், கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? என்று! மாணிக்கக்கல்லாக ஒளி விடுவது 'கனம்' காரணமாக கூழாங்கல்லாகி விடக் கூடாது!!

வாய்ப்புகள், வசந்தம்போல வரும், போகும். இலக்கியச் சப்தத்தால் வாழ்வதென்பது வேறு! சினிமா உலகில் கண்ணதாசனுடைய எழுத்தும் சிறப்

(2-ம் பக்கம் பார்க்க)

(1-ம்பக்கம் தொடர்ச்சி)

பும் இன்று பெற்றுள்ள பெருமையை, சொந்த விருப்பு வெறுப்பு காரணமாகக் குறைந்து மதிப்பிட முடியாது. ஓசை நயமும், உள்ளத்தையுருக்கும் வரிகளும் 'கவிஞனே! என்று வாழ்த்தவே செய்யும்!! அதே சமயம் இப்படி நாம் வாழ்த்தப் பெறுகிறோமே என்கிற தலைக் 'கனத்தால்' எதையும் தவிதைகளாக்கி விடக்கூடாது. 'நதி எங்கே போகிறது? கடலைத்தேடி!' என்பதை ரசிக்கும் நாம், "நாள் எங்கே போகிறது? இரவைத் தேடி!", என்பதையும் எப்படி ஏற்க முடியும்? இரவும் பகலும் சேர்ந்தது ஒரு நாள் என்பது தானே உலகக் கணக்கு! 'நாள் எங்கே போகிறது என்பதற்குப் பதில் 'பகல் எங்கே போகிறது?' என்றிருக்க வேண்டும் என்று சொல்ல, பாராட்டுகின்ற ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு!!

பல்லிளிப்பர், பராக்குக் கூறுவர், 'பர்ஸ்' கனமாயிருக்கும் வரையில். புகழும் செல்வமும் ஓரிடந்தனிலே நிலை நில்லாது லகினிலே! அதற்கப்பாலும் வாழ்விருக்கிறது, நம்மைத் துதி பாடுவோருக்கப்பாலும் நண்பர்கள் இருக்கிறார்கள், தொலைவிலும், கவிஞர்களும் அறிஞர்களும் இருக்கிறார்கள் என்று ஒவ்வொரு வினாடியும், புகழ்ப்போதையில்கிடப்போர் எண்ண வேண்டும்.

ஊரார் வேடிக்கை பார்க்கிறார்கள் என்பதற்காகத் தானே தலையில் மண்ணையும் கல்லையும் வாரிப்போட்டுக் கொண்டால் 'தத்துவம்'என்று சொல்ல மாட்டார்கள்; பைத்யம்' என்றே அழைப்பார்கள். 'நினைப்புகள்' யாவுமே 'சிந்தனை'கள் ஆகா! நினைத்ததைக் கொட்டுபவனுக்கும் வெந்ததைத் தின்னுபவனுக்கும் வித்தியாசம் கிடையாது!!

அண்ணா! கண்ணதாசனைப் புகழ்ந்தார்; கண்ணதாசனின் தமிழை, திறனைப் புகழ்ந்தார்! மௌனியாக அதை ஏற்கலாம். ஆனால், மடமடவென ஆர்ப்பரிக்கலானார் கண்ணதாசன். அவரைப் புகழ்வதால் த. தே. க. உச்சி மேட்டுக்கு போய் விடும் என்பதில்லை. அப்படியொரு நிலையென்றால் இந்நேரம் கண்ணதாசனுக்கிருக்கிற புகழுக்கு அதன் கொடி துவளாமல் பறந்திருக்க வேண்டுமே!!

அரசியல் என்பது, மனிதனுக்கு மனிதன், தங்களுடைய மன எரிச்சலையும், இழிதன்மையையும் கொட்டிக் கொள்ளும் சாக்கடையல்ல. உண்மையை மதிக்க வேண்டும்! அதே சமயம் கண்ணியமுமான எண்ணமும் செயலும் வேண்டும்!!

"இன்று ஆங்கிலம் தெரிந்திருந்தால் உலகமெங்கிலுமென்ன தேவலோகத்தில் கூட பேசலாமே! ஆனால் இந்தி அப்படியல்ல, நம்மீது வேண்டுமென்றே திணிக்கிறார்கள். இந்தி, குதிரை ஓட்டுவதற்குத் தான் சரி. இந்தியில் ஒரு மரியாதைச் சொல் இருக்கிறதா?

உலகத்திலேயே சிறந்த 4 மொழிகளிலும் உயர்ந்ததுமூத்தது, மொழி வளம் நிறைந்தது இலக்கியங்கள் நிறைந்தது தமிழ் மொழியாகும். தமிழில் 3500 தமிழிலக்கியங்களும் இரண்டரை லட்சத்துக்கு மேற்பட்ட பாடல்களும் உள்ளன. எத்துணை விதமான சந்தங்கள் உண்டோ அவையத்தனையும் தமிழுக்குத்தான் உண்டு. அதன் மேல்தான் இந்தி உட்கார ஆயத்தமாகி விட்டது. பொதுவாக இன்று இந்தி வேண்டுமா? இந்தியா வேண்டுமா? என்று கேட்டால், இந்திதான் வேண்டும் என்றால் இந்தியா துண்டு துண்டாகும்."

வெள்ளக்கோயில் என்கிற இடத்திலே பேசியிருக்கிறார் கவிஞர் கண்ணதாசன்! வாழ்க கவிஞனே உன் வீரம் என்று வாழ்த்துலோமே தவிர, 'சரியய்யா, தமிழைக் காக்க உன் கட்சித் தலைவரோடு நீயேன் சிறை செல்லவில்லை' என்று நாம் கேட்க மாட்டோம். அது நமது பண்பு. நமது கழகம் வளர்க்கும் பண்பு.

அதே கவிஞர் கண்ணதாசன் கோவையில் பேசியிருக்கிறார். கண்ணதாசன் கவிஞனா'யிருக்கும்போது பாராட்டும் நமக்கு, 'சாதாரண'மாகும்போது பரிதாபமே உண்டாகிறது. பேசியிருக்கிறார் அவர்.

"இனிமேல் சிறைக்குச் சென்றால் இறந்து விடலாம் என மருத்துவர்கள் திட்டவட்டமாகஅறிவித்திருப்பதால் தான் அண்ணாத்துரை இந்தித்திணிப்பையெதிர்த்துப் போராட்டம் நடத்தத் தயங்கிக் கொண்டிருக்கிறார்."

செச்சே!உயர்தரமாக நினைப்பவனே கவிஞன் என்கிறார் வொர்ட்ஸ் வொர்த். ஆனால் உயர்தரமாகவும் நினைக்க முடியும். சாதாரணமாகவும் எண்ண முடியும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்கிறார் கண்ணதாசன்.

மருத்துவர்கள் திட்டவட்டமாகக் அறிவித்தார்களாம்! — நீயாரப்பா, எப்போதப்பா இதையறிந்தாய், என்று கேட்கமாட்டார்களா, மக்கள்? அதிலும் அண்ணாவின் சாவைக் நினைக்க, அட நண்பா, உனக்கு எப்படியப்பா மனம் வந்தது! உன்னை வாழ்த்திய அந்த மாமேதைக்கு உடனடியாக நீ வழங்கும் பரிசா!

சாக வேண்டும் அண்ணா! எனும் எண்ணம் எப்படி உருவாயிற்று மனதில்? உனக்கு யார் சொன்னார்கள்? அப்படி

(11—ம் பக்கம் பார்க்க)

நாங்குனேரியை நினைத்து
நாக்கி ல்நீர்வழிய நிற்கிறதுகாங்கிரசு!
நல்லோரே! நாட்டோரே!
நல்ல பதில் தர முனைவீர்!!

°° °° °°

தங்கத்துக்குப் பூட்டு போட்டார்,
தைரியமாக வருகிறார் ஓட்டு கேட்க!
தரப்போகும் பதில் என்ன?
வழங்கப்போகும் பரிசு என்ன?

°° °° °°

குறை யென்றேம் விலைவாசிகளை,
கோ.சு.மணியைப் பிணமாகத்தந்தார்
கொள்கைப் பொற்செழியனை சாகவைத்தார்
தாலியறுந்த தங்கைகளை நினைப்பீர்!
தரங்கெடுக்கும் காங்கிரசை முறியடிப்பீர்!

°°

சென்னைச் சிறை வழங்கிய தழும்புகளை,
சிற்றெறும்புகளாய்த் துவைத்த காட்சிகளை
பதினாயிரவரைச் சிறையில் போட்ட வேதனையினை,
தங்கையும் தாயும் பட்ட அடி உதைகளை,
நினைவில் கொள்ளும் சமயம் இது.
தூங்காப்புலியே! எழுந்திரு.

°° °° °°

போடி!—அதற்கடுத்து திருவண்ணாமலை,
செந்தமிழ்ச் சிந்து! செயல் வீரன்!
கழக முரசொலி! கம்பீரக் காட்சியினன்!
தி. மு. க. சின்னம் ப. உ. சண்முகம்.
வெற்றி நாட்டின் வெற்றி! நாடாளும்
மமதையாளர்களுக்கோர் படிப்பினையாகும்!

பணம் அனுப்புங்கள்! கார் தயாரியுங்கள்!
இது ஓர் நெருக்கடி வேளை.
நெஞ்சமலர்களே! நீங்கள் வாருங்கள்
மகிழ அல்ல! ஊர் சுற்ற அல்ல!!
பம்பரம் எனச் சுழன்று ப. உ. ச வை வெல்லச்செய்ய!!

ஒவ்வொருவரும் இயன்றதை **உதவுக!**

திருவண்ணாமலை வெற்றி தி. மு. க. வெற்றி
தீண்டவரும் இந்திக்குப் பேரிடி!
பிறகு வருந்திப் பயனில்லை--
பிரியமுள்ளோரே,
கிளம்புங்கள் உதவ!!

புதிய 'சாதி' உருவாகும்!

★ போராட்டம் தேவை ★

'லாவணி' பாட அல்ல

காமராசர் துரோகம்

நான் சாமான்யன்

அண்ணாவின் அழைப்பு

அரசியல் நிலைமைகளைப் பற்றியும் கழகம் கடைபிடிக்க வேண்டிய முறைகள் பற்றியும் பல கூட்டங்களில் நான் விரிவாகவும் விளக்கமாகவும் பேசி வருகிறேன். அரசியலில் அக்கறை கொண்டுள்ள நாம் எதையும் ஆய்ந்து அறிந்து தான் தக்க முடிவு எடுக்க வேண்டும். கழகத்தின் பொதுக்குழு ஜூன் மாதம் 8, 9, 10, தேதிகளில் சென்னையில் கூடுகிறது.

எதிர்காலத் திட்டங்களை ஆராய்ந்து தெளிந்து அதன் விளைவுகளை அறிந்து நல்ல முடிவு எடுக்க வேண்டும். அந்த முடிவை நீங்கள் செயல் மூலம் செய்ய வேண்டும். அரசியலில் அவசரப்பட்டவர்கள்-அவசரப் புத்திப்படைத்தவர்கள் கழகத்தை இழித்தும் பழித்தும் பேசி வருகிறார்கள்.

கழகம் மக்களுடைய இயக்கம். கழகம் மக்களின் எண்ணத்தை அறிந்து தான் செயல்படும். "அவசரமாக முடிவு எடுத்து ஆவேசமாக செயல்பட்டு அற்பமாக முடித்துவிடும் அரசியல் வாதிகளல்ல நாம். நாம் செய்கிற காரியங்களை மக்கள் உணர வேண்டும். கழகத்தின் செயலை மக்கள் ஆதரிக்க வேண்டும்.

புதிதாக அத்தர் போட்டுக் கொண்டு வந்தவன் பக்கத்திலிருப்பவனைப் பார்த்து வாசனை அடிக்கிறதா என்று ஓயாது கேட்பானேயானால், இவனது தொல்லை பொறுக்காது அவன் வாசிப்பதாக தெரிகிறது என்று சொல்வான். நல்ல அத்தர் பூசிக் கொண்டு வந்திருப்பானேயானால் பக்கத்திலிருப்பவன் உயர்ந்த அத்தர் பூசி இருக்கிறீர்கள் போலிருக்கிறதே என்று நம்மை கேட்பான்.

அதுபோல நாம் நடத்தும் போராட்டத்தையும் — அதை ஏன் நடத்துகிறோம், என்பதையும் மக்களறிந்து செயல் பட வேண்டும்.

மக்களுக்காக நாம் போராட்டம் நடத்த வேண்டும்.

போராட்டத்தில் பெயரைப் பதிவு செய்து கொண்டால் மட்டும் போதாது. போராட்டத்தை இந்த முறையில் ஆரம்பித்து இந்தவகையில் செயல் படுத்த வேண்டும். திடீரென்று முடிவெத்து திடீரென்று முடிந்து விடுவது போராட்டமல்ல.

நாம் பூணக்கூடிய இந்தப் போர்க்கோலம் பல ஆண்டு வரை நீடிக்கும். மாலையிலே முடிவெடுத்து விடியற்காலையிலே அமிழ்ந்து அழிந்துவிடும் தன்மையில் இருக்கக் கூடாது.

போராட்டத்தில் இறங்குகின்ற நாம் 10 ஆண்டுகளுக்கு தேவையான பொருள்களை சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும். வலிமையைத் தேக்கிக் கொள்ள வேணடும். உங்கள் ஆர்வம் குறைபடாத முறையில் உங்கள் மகிழ்ச்சி உர் தத்தக்க விதத்தில் அவசரமாக முடிவு எடுக்காது ஆர அமர யோசித்து நல்ல முடிவை பொதுக்குழு நிறை வேற்றும்.

ஐதராபாத்தில் இந்திய உள் நாட்டு அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி பேசும் பொழுது உறுதி மொழி தந்தாராம். உறுதி மொழி என்பது அவரது ராஜதந்திரமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்.

முன்பு குடியரசுத் தலைவராக இருந்து சமீபத்தில் காலமான ராசேந்திர பிரசாத் இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரை ஆங்கிலம் நீடிக்கும் இந்தி திணிக்கப்பட மாட்டாது என வாக்குறுதி தந்தார்.

இந்திய துணைக்கண்டத்தின் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு பாராளுமன்றத்தில் உறுதிமொழி யளித்தார். இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரை காலவரையறையின்றி ஆங்கிலமே துணைமொழியாக நீடிக்கும் என்று உறுதி மொழி யளித்தார். இதுதான் சர்க்காரின் முடிவு—இதுவே அரசாங்கத்தின் வாக்குறுதி என்றும் உறுதியாக பேசினார். அவர் பேசிய இண்ரடு நாட்களுக்குப்பின் கோவிந்த வல்லப பந்த் பாராளுமன்றத்தில் நேருவின் உறுதி மொழியை நான் ஊர்ஜிதப் படுத்து கிறேன். நேருவின் உறுதி மொழியை மீறமாட்டேன் என்று பேசினார்.

பாராளுமன்றத்தில் பண்டிதர் நேரு பேசியதற்கும்—பந்த் பேசியதற்கும் விததியாசம் என்ன வென்றால் நேரு அவர்கள் எழுந்து நின்று பேசினார். பந்த் அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசினார். ஏனென்றால் பந்துவின் உடல்நிலை சரியில்லை. இத்தனைபேர் பாராளுமன்றத்தில் கொடுத்த உறுதி மொழியில் சட்டத்தில் ஏதாவது ஒன்று இடம் பெற்றிருக்கும் என்றால் இல்லை. நேரு பாராளுமன்றத்தில் கொடுத்த வாக்குறுதி எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரமாக வந்துள்ளது.

இப்பொழுது நிறைவேற்றப் பட்டுள்ள சட்டத்தில் இடம் பெறவில்லை. அது குற்றம் என்று ஆணவத்தோடோ—அலட்சியத்தோடோ குறிப்பிடவில்லை.

தமிழகத்தில் லட்சக்கணக்கான மக்களுடன் நாள் தோறும் தொடர்பு கொண்டு அவர்கள் உள்ள மறிந்தவன் நான். எங்கோ அல்ல; டில்லி மாநகரில்; யாரோ அல்ல; காங்கிரஸ் தலைவர் ஒருவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறி பத்திரிகைகளில் வெளி வந்தைதத கூறுகிறேன்.

இந்தி பேசாத மாநில மக்களுக்கு உறுதி மொழி கொடுத்தபடி ஆங்கிலமே துணை மொழியாக இருக்க வேண்டும். ஆட்சி மொழிக்குரிய அந்தஸ்து மதிப்பு ஆங்கிலத்திற்கு நிச்சயமாக தரவேண்டும். திட்ட வட்டமாக ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். தற்சமயம் நிறைவேற்றப்பட்ட மசோதாவில் அரசியல் சட்டத்தில் இல்லாதது குறித்து பெரிதும் வருந்துகிறேன் என்று கூறியிருக்கிறார். கூறி இருப்பவர் யார். காங்கிரஸ்காரரர். நீண்ட நாள் பதவியிலிருந்தவர். அமைச்சராக இருந்தவர். தற்சமயம் ராஜ்யசபை உறுப்பினராக இருக்கும் கே. சந்தானம் என்பவர் தான். இதற்கு காமராஜர் என்ன சொல்லப் போகிறார்!

கிராமப் புரங்களில் கையிலே உடுக்கை அடித்துக் கொண்டு லாவணி பாடி காமன் பண்டிகை கொண்டாடுவார்கள். காமன் எரிந்து விட்டானென்றும் காமன் எரியவில்லை இருக்கிறார் என்றும் சண்டை போட்டுக் கொள்வார்கள். அதைப் போல நான் நேருவின் உறுதி மொழி சட்டத்தில் இல்லை என்கிறேன். காமராஜரும் பக்தவத்சலமும் லால் பகதூர் சாஸ்திரியும் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் நேருவின் உறுதி மொழி இருக்கிறது என்று கூறுகிறார்

கள். இந்தி ஆட்சி மொழியாக வருவதால் உங்களுக்கு யாதொரு கெடுதலும் வராது எந்தவித பாதகமும் ஏற்படாது என்று பேசி வருகிறார்கள்.

இந்தி மத்திய ஆட்சி மொழியானால் இந்தி பேசாத மக்கள் நிச்சயம் பாதிக்கப்படுவார்கள். அரசாங்க அலுவலகங்களில் இந்தியை திணிப்பதால் இந்தி மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் முதல் சலுகைகளைப் பெறுவார்கள். ஒரு ஆளும் வர்க்கமே—ஆளும் ஜாதியே உண்டாகும் என்று மொழிக் குழுவின் உறுப்பினராக இருந்த ஒருவர் கூறியிருக்கிறார்.

இதை இந்தியால் தமிழுக்கு ஆபத்து இல்லை என்று ஆர்ப்பரிக்கின்ற பக்தவத்சலமும் காமராஜரும், லால்பகதூர் சாஸ்திரியாரும் யோசித்துப் பார்க்க வேண்டும். அண்ணாத்துரை ஏன் குழப்புகிறார். இந்தி மொழியை தேர்தல் பிரச்சினையாக்கி 1967 தேர்தலில் நிற்கட்டுமே என்று, காமராஜர் சொன்ன யோசனையை நான் ஏற்றுக்கொள்ள தயார்!

இந்தி மொழியை மட்டும் வேண்டாம். தங்கள் ஆலோசனைப் படியே இந்தியையும் திராவிட நாட்டுகொள்கையையும் 1967 மக்கள் முன் வைத்து தேர்தலில் போட்டியிடுவோம். இப்பொழுது கிடைத்து இருக்கும் 34 லட்சம் வாக்குகளில் 1 லட்சம் வாக்கு குறைந்தால் கூட நான் திராவிட நாட்டுக் கொள்கையை விட்டு விடுகிறேன் என்று ஆணவத்தோடு சொல்லவில்லை. அறைகூவல் விட்டுச் சொல்கிறேன்.

இது மட்டுமல்ல; 'தடைச் சட்டம்' ஒன்றையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். தடைச் சட்டம் எப்படி பிறந்தது என்பதையும் அது எபபடி வளர இருக்கிறது, அது எப்படி மடிய போகிறது என்பதை பொது மக்கள் பார்த்துக் கொள்ளட்டும்.

முன்பு தி.மு.க.வின் கருத்துகளை மக்கள் ஏற்கவில்லை மக்கள் நம்பக்கம், கூட்டம் அங்கே கூடும், ஓட்டு நமக்கே என்று பேசியவர்கள்; தி மு.க.வுக்கு தடை விதித்து அவர்களைப் பெரிய மனிதர்களாக்குவதா? இவர்களைத் தடுக்க சட்டம் ஏன்?

நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று மேடை தவறாது பேசி வந்த அந்த பெரிய மனிதர்களின் பேச்சை துச்சமென மதித்து கழகத்தை தடுக்க கவைக்குதவாத தடைச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். மக்களின் ஆதரவு கழகத்தின் பக்கம் இருக்கிறது. பிரிவினைக் கொள்கையை மக்கள் ஆதரிக்கிறார்கள்.

தமிழகத்தில் காங்கிரசுக்கு அடுத்த படியாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் இருக்கிறது என்று நான் குறிப்பிடக்காரணம் நான் தி. மு. கழகத்தவன். 34,0000 மக்களின் வாக்குகளைப் பெற்ற தி. மு. கழகத்தின் சார்பில் நேருவின் உறுதி மொழி நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் இடம் பெறவில்லை. இந்தி பேசாத மக்கள்மீது கட்டாயமாக இந்தியைத் திணிப்பது தவறு என்று அலட்சியமாக அல்ல; வலியுறுத்திக் கூறுகிறேன்.

இதையேதான் இன்றைய அரசியல் வாதிகளான ராசகோபாலாச்சாரியாரும் சர். சி. பி. இராமசாமி ஐயரும் நிர்வாகத்தில்உள்ளவர்களும்பண்டிதரின் உறுதி மொழி காற்றிலே செல்லரித்தகாகிதமாக பறந்து விட்டது. பண்டிதரின் உறுதி மொழி நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தில் இல்லை என்று பேசி வருகிறார்கள்.

தமிழகத்தின் தவப்புதல்வர் காமராசர் நேருவின் உறுதி மொழி அரசியல் சட்டத்தில் இருக்கிறது என்று பேசியுள்ளார், அவருக்குப் பக்கத்திலே இருக்கும் பக்தவத்சலமும் நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் இருக்கிறது. இந்திகாமராசர் இருக்கும்வரை ஆட்சிமொழியாக வராது. தமிழுக்கும் ஆபத்து வராது என்று பேசியுள்ளார். புரிந்து கொள்ள முடியாத இவர்களுக்கு—அண்ணாத்துரை குழப்புகிறார் என்று மழுப்புகின்ற மந்திரிகளுக்கும் புரிகின்றவாறுராஜ்ய சபையில் சட்டம் தெரிந்த நீதிமான் "சாப்ரூ" பேசியுள்ளார். "நேருவின் உறுதிமொழி சர்க்காரின் அரசியல் சட்டத்தில் இடம்பெறாததுகண்டு பெரிதும் வருந்துகிறேன் என்று பேசியுள்ளார்கள். அதையேதான் நானும் சொல்கிறேன். நான் சொல்வதை ஒத்துக் கொள்ள மறுக்கிறீர்கள்.

அதோ தூரத்தில் உட்கார்ந்திருப்பவன் சொக்கலிங்கம் என்று நான் சொல்ல இல்லை—இல்லை அது சின்னசாமி என்று நடராசன் சொன்னால் வாதம் வளருமே தவிர பிரச்சினை தீராது. பிரச்சினை தீரவேண்டுமானால் ஒன்று அங்கு உட்கார்ந்திருக்கும் ஆள் எங்கள் அருகில் வரவேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் இருவரும் அந்த ஆளருகே சென்று சொக்கலிங்கமாக இருந்தால் என்ன நடராஜா உனக்கு ஆள் அடையாளமே தெரியாமல் பேசுகிறாயே என்று நான் சொல்லலாம்.சின்னச்சாமியாகஇருந்த பாருங்களண்ணா சின்னசாமியைப் போய் சொக்கலிங்கம் என்றீர்களே என்றுசொன்னால் வாதம் நீங்கி பிரச்சினை தீரும். பிரச்சினை தீர யோசனை ஒன்று கூறுகிறேன். நேருவின் வாக்குறுதி நிறைவேற்றப்பட்ட மசோதாவில் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ளதா? இல்லையாஎன்றுஅறியமுயன்று பெரிய நீதிபதிகளை நியமிப்போம். வங்காளத்திலிருந்து ஒருவரையும், பம்பாயிலிருந்து ஒருவரையும் ஆக மூன்று நீதிபதிகளின் முடிவுக்கு கட்டுபட நான் தயார். அவர்கள் நேருவின் உறுதி மொழியையும் ஆட்சியின் மசோதாவையும் ஆய்ந்துஅறிந்துமுடிவு சொல்லலட்டும். காங்கிரஸ்காரர்கள் தயாரா? என்று கேட்கிறேன். முன்பு ஒருயோசனைகூறினேன். எந்த அமைச்சரிடமிருந்தும் நாளதுவரை ஒரு பதிலையும் காணோம். என்னுடைய இந்த யோசனையால் எந்தவித குந்தகமும் இடர்பாடும் உங்களுக்கு ஏற்படாது. இந்தியை திணிப்பதால் உங்களுக்கு எந்தவித இடர்பாடும் உண்டாகாது என்று லால்பகதூர் சாஸ்திரிார் சாகஸப் பேச்சு பேசுகிறார். லால்பகதூர் சாஸ்திரியார் நான் சொன்ன முடிவை யோசனையை ஏற்று கொள்ளத் தயாரா என்று ஆணவத்தோடு கேட்கவில்லை. பணிவோடு கேட்கிறேன்.

யோசனை கூற நான் அருகதையற்றவனாக இருக்கலாம். சிறியவன் தான். மிக மிக சமான்யன் தான். பதவியிலிருப்பவனல்ல, என்னுடைய தயவு யாருக்கும் தேவையில்லை. எனக்கும் யாரும் மதிப்பளிக்க தேவையில்லை. நாட்டிற்கு மக்களின் கேள்விக்கு மதிப்பளித்து பதில் சொல்லுங்கள்.

தமிழகத்தின் பத்திரிகைகளுக்கு முக்கியமான பிரச்சனை கந்தப்பன் 22 காரட் தாலி கட்டினாரா? 14 காரட் தாலி கட்டினாரா? மந்திரி பூவராகன் மனைவிக்கு பச்சை நிற புடவை எடுத்தாரா ஆரஞ்சு கலரில் புடவை எடுத்தாரா? இவைகளைத் தான் முக்கிய பிரச்சனை என்று நினைக்கிறார்கள். அது தவறு. பிரச்சனைகளை ஆராய்ந்து மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். இந்தி மொழியைத் திணிக்கவில்லை; அண்ணாத்துரை குழப்புகிறார் என்கிறார் காமராசர்.

படித்து பட்டம் பெற்றவர்

(9—ம் பக்கம்பார்க்க)

"இந்தியை தேசீய மொழியாக்க வேண்டும் என்று அரசியலமைப்பில் ஒரு ஷரத்து சேர்க்கப்பட வேண்டுமென்று யோசனை காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் வந்தபோது, என்ன நடந்தது என்ற இரகசியத்தை சொல்கிறேன், அரசியலமைப்பிலுள்ள இந்த 115-வது விதியை நிறைவேற்றுவதிலிருந்த சிரமம் வேறு எதிலும் இல்லை. இதற்குத்தான் பலத்த எதிர்ப்பு இருந்தது. நீண்ட விவாதத்திற்குப் பிறகு, ஓட்டுக்கு விட்டதில் 'இந்தி வேண்டும் என்கிற கோரிக்கைக்கு 78 ஓட்டும், 'இந்தி வேண்டாம்' என்பதற்கு அதே 78 ஓட்டும் கிடைத்தன. அதனால் ஒருவித முடிவும் எடுக்கப்படவில்லை. பிறகு நீண்ட நாள் தள்ளி போட்டு, ஓட்டு எடுத்தபோது வேண்டாம் என்பதற்கு 77-ம் வேண்டும் என்பதற்கு 78 ஓட்டுகளும் கிடைத்தன. இப்படி ஒரே ஒரு ஓட்டில் தான், இந்தி, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

—அம்பேத்கார்

அருந்துகிறோமே 'டீ' அதற்குத் தமிழில் 'தேநீர்' என்போம்—'தேத் தண்ணீர்' என்கிற வார்த்தையும் உண்டு—'சுவை நீர்' என்று சொல்வோரும் உளர். இந்த ஒரு பொருளுக்கு இத்துணைச் சொற்கள், தமிழில் உள்ளன,

இந்தியில் 'டீ' என்பதற்குத் தனியான சொல்இல்லையாம்! அதனால், நேருவின் மாகாணத்திலுள்ள ஒரு பத்திரிகை, ஒரு புதிய வார்த்தையைக் கண்டு பிடித்துத் தந்திருக்கிறது—என்ன தெரியுமோ? துக்த சர்க்கர மிஸ்ரித் பர்வதோ உத்பன்ன வாஷ்பமயே பயே—மயக்கம் போட்டு விழுந்து விடாதீர்கள்!—'டீ'—'தேநீர்'—என்பதற்குத் தான் இந்தியில் இப்பெயர்! ஒரு முறை சொல்லுங்கள்—வேகமாக சொல்லிப் பாருங்கள்—இந்தியின் இலட்சணம் புரியும். 'தேநீர்' எவ்வளவு ரத்னச் சுருக்கமாக உள்ளது. தே—சுவையுள்ள, நீர்—நீர், என்று பொருள் கொள்ள்லாம், எளிதில். இந்த துக்த சர்க்கர மிஸ்ரித் பர்வதோ உத்பன்ன வாஷ்பமயே பயே என்றால் என்ன பொருளாம் தெரியுமா மலையில் விளைந்த ஏதோ ஒரு பொருளுடன் பாலும் சர்க்கரையும் வெந்நீரும் கலந்த ரு பானம்—என்று அர்த்தமாம்!!

கவனிக்க

'அறப்போர், சம்மந்தமாக கடிதம் எழுதுவோர், 'நிர்வாகி, அறப்போர், 9. ஏ. டாக்டர் சி. பி. ஆர். ரோடு, சென்னை-18.' என்ற முகவரிக்கு எழுதுக.

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல் *

சந்தா விவரம்

உள்நாடு
ஆண்டு சந்தா 8—00
6 மாத சந்தா 4—50
வெளிநாடு
ஆண்டு சந்தா 9—00
6 மாத சந்தா 5—00

ஒளி - 3 | 31-5-'63 வெள்ளி | கதிர் - 11-12

★ கல்லிலே, தேனா!! ★

சேற்றிலே சந்தனம், நெருப்பிலே நீர், கல்லிலே தேன், கொடுக்கிலே குளிர்ச்சி, எதிர்பார்ப்பது எவ்வளவு வீணென்பதை அறிய விவேகம் தேவையில்லை! அதேபோல தாசர் புத்தித்தலைக்கேறியோரிடம் நீதியும், சர்வாதிகார வெறியர்களிடம் தர்க்கவாதமும், எதெப்படிப் போனால் என்ன 'வயிறு' நிரம்பினால் போதும் என்றெண்ணும் அரசியல் வாதியிடம் நேர்மையும்கிடைக்குமென்று எதிர்பார்ப்பதும் வீணென்பதை விளக்கத்தேவையில்லை!!

தமிழுக்குக் கேடு! தென்னாட்டுக்குத் தீது! தேவையில்லாத தேள் வருகிறது கொட்ட!—என்று, ஆளுக்கு ஆள், அரசமரத்தடியிலும், குளக்கரையிலும், கூடிடும் இடம் தோறும் இன்று பேசுகிறார்கள். அமைச்சர் பக்தவத்சலமும் அவரது 'குரு' காமராசரும் கர்ச்சனைகள் புரியப்புரிய சிரிப்பும் சிந்தாகூலமும் ஏற்படுகிறதேயொழிய சிறிதேனும் நம்பிக்கை ஏற்படவில்லை, மக்களுக்கு! சட்டியிலிருந்தால் அகப்பையில் வரும் என்பது பழமொழி! உள்ளத்தில் தெம்பிருந்தால் வார்த்தைகளிலும் உண்மை மணக்கும்! 'என் வாழ்நாள் உள்ள வரை உன்னடி பணிந்துய்வேன்' என்று காங்கிரசின் பேரால் வடவராதிக்கத்துக்குத் தங்களை ஒப்படைத்துவிட்டவாசாலகர்களிடமிருந்து வேறெதை நாம் எதிர்பார்க்க முடியும்? பேச்சு, நாறுகிறது! தரவரும் விளக்கங்கள்தப்பட்டைமுழக்கங்களாகின்றன! சுதி ஏறும்போது திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியை எதிர்க்கப் போகிறதாமே? எதிர்க்கட்டும் பார்க்கிறேன்", என்று திமிர்க்குரல் கிளம்புகிறது!!

இந்தி எதிர்ப்பு இயக்கம் நடத்தப் போகிறேன் என்று ஓமந்தூர் ராமசாமி இந்நாட்டு முதலமைச்சராமையிருந்த போது முழக்கம் எழுப்பினார் பெரியார் ராமசாமி. "செய்வாயா எதிர்ப்பு! செய், செய், பார்க்கிறேன் என்று முண்டாத் தட்டவில்லை, முதியவரான ஓமந்தூரார். பெரியாரை அழைத்தார்! பேசினார்!!

எதிர்ப்போரைக் கலந்து என்ன பிரச்சினைகள் என்பதை அறியும் ஆசையிருந்தது ஓமந்தூராருக்கு. ஆனால் காமராசரிடம் அந்தக் கண்ணியம் கூட இல்லை. எல்லாந்தெரிந்தவர் போல் இன்று காமராசரை நாடு உருவாக்கியிருக்கும் கொடுமையின் விளைவேயொழிய அவரைக் குற்றம் சொல்வதிலும் பொருளில்லை. தான்' என்கிற தைரியமும், 'தன்னால் எல்லாம் நடக்கும்' என்கிற முரட்டு வெறியும் இன்று மூளையும் நரம்புமாகி விட்டன காமராசருக்கு! கையிலே போலீசிலாகாயிருக்கிறது. போதாவிடில், பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது என்கிற வெறித்தனம்! இல்லாவிடில் விவேகத்துக்கு வேலைகொடுக்க வேண்டிய முதலமைச்சர், வேகத்துக்கா வேலை கொடுப்பார்? பிரச்சினையைச் சொல்லுங்கள், புரியாததால் கேட்கிறேன், சொல்லுங்கள் என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியவர் விட்டேனா, விடுவேனா, தாமதிப்பேனா! தடைப் போட்டுப் பார்க்க மாட்டேனா, என்று குதிப்பார்?

காமராசரைவிடப் படித்தவர் என்பதுமட்டுமல்ல, பக்குவம் பெற்றவர் பக்தவத்சலம்! அவரும் இதர பரிவாரமும்—அமைச்சர் குழுவைத்தான் குறிப்பிடுகிறோம். பிற காங்கிரஸ்காரர்களெல்லாம் மொழிப் பிரச்சினையில் விழிப்பதை அறிவோம்—ஏனிப்படி வடக்குக்கு 'வால்' பிடிக்கின்றன? காங்கிரஸ் கட்சி என்கிற கட்டுப்பாடா? அல்லது 'இந்தியா' என்கிறஒருமைப்பாடு உருவாக இந்தி மொழி அவசியம் என்று கருதுவதாலா?

"ஆமாம்! இந்தியா ஒரு தேசம். அதைக் கட்டிக் காத்திட ஒரு பொது மொழி தேவை! ஆங்கிலம் அந்நியர் மொழி. அது தேவையில்லை. எனவே, இந்தி வேண்டும்"—இதுதான் காமராசரும் பக்தவத்சலமும் சொல்ல முடியாமற் சொல்லும் காரணமாகும்! ஓங்கிப் பேசிடும் காங்கிரசாரும் இதையே காரணமாக்கி மக்களுக்குக் காட்ட முற்படுகின்றனர்!!

"அப்பா தம்பி! உனக்கு எது வேண்டும்? அகண்டு பரந்த இந்திய சாம்ராஜ்யமா! ஷேக்ஸ்பியரா!! இரண்டில், எது வேண்டும், உனக்கு?"

"இந்திய சாம்ராஜ்யமா? சே! அது இல்லாமல் என்னால் வாழ முடியும்; ஆனால் ஷேக்ஸ்பியர் இல்லாமல் வாழ முடியாது. இந்திய சாம்ராஜ்யம் இன்றோ நாளையோ, என்றோ ஓர் நாள் அழிந்துவிடும்; ஆனால்எனதுஷேக்ஸ்பியர்இன்றல்ல, நாளையல்ல, எந்நாளும் இறவாமல் என்னோடு இருப்பார்!"

கார்லைல் எனும் ஆங்கில நூல்வலார் எழுதிய நூலொன்றின் கதாநாயகனைப் பார்த்து விடப் படுகிறது, இப்படியொரு வினா. அதற்கு அவன், ஷேக்ஸ்பியரின் கவிதைகள் சாகமாட்டா, அவைகளுக்கு எதிரில் இந்திய சாம்ராஜ்யம் எனக்கு தூசுபோல என்கிறான்.

கவிதை வரிகள்தாம்! ஆனால், அதில் பொதிந்திருக்கும் வேகமும் உறுதியும் எத்துணை சிறப்பு வாய்ந்தவை!! ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பிடிப்பிலிருந்த இந்தியா, இலங்கை, பர்மா, எகிப்து, என்று பல நாடுகள் இன்றில்லை; ஆனால், ஆங்கிலேயரின் புகழைச் சொல்லும் ஷேக்ஸ்பியரின் கவிதைகள் எள்ளளவும் குறையவில்லை. பிரான்சு, எப்படியெப்படியோ ஆயிற்று! ஆனால் அந்நாட்டின் எழிலாசிரியர்களின் நூல்கள், செத்து விடவில்லை. நாடும் எல்லையும் நிலையானதல்ல; மாறும்!! ஆனால், மொழியும், அது வழங்கும் இலக்கியங்களும் என்றும் சாகா.

சாகாததைக் கூடச் சாகடித்துக் காட்டுவோம் என்பது தான் தமிழகம் போன்ற பகுதிகள் மீது வடவர் திணிக்கும் இந்தி மொழி! அதற்கு ஒத்தூதுகின்றனர் இங்கிருக்கும் பதவித் தேனருந்தும் தும்பிகள்!! கார்லைல் தீட்டிய நூலின் நாயகன் சொன்னான்—என் கவிஞருக்கு ஈடாக, ஒரு சாம்ராஜ்யமா? தூ! மட்டம்! மட்டம்! என்று.

அதுபோல என் தமிழுக்கு ஈடாகப் பதவியா! அது முதலமைச்சர் பதவியானாலென்ன, இந்திய உபகண்டம் முழுதுமே பெருமை தருவதாயிருந்தாலென்ன, தூ! தூ! துரோகியாகவா? என்று சொல்லியிருக்க வேண்டும், காமராசரும் சீடகோடிகளும்!!

கபர்தார்!—என்று மிரட்டுகிறார்கள், இவர்கள்.

இந்த மிரட்டலுக்கு நாடு பதில் தர வேண்டும்—இன்னும் சூடும் சொரணையும் அவர்களளவுக்கு நமக்கு மரத்துப் போகவில்லை யென்பதைக் காட்ட.

வழி காட்டவே, வரும் கிழமைகளில் சென்னையில் கூடுகிறது பொதுக்குழு!!

காமராசர் தலையில் 'ஐஸ்!'

ஆந்திரத் தலைநகராம் ஐதராபாத்திலே இந்த கிழமை கூடிய எட்டாவது தென்மண்டலக் கவுன்சிலின் கூட்டத்தில் கலந்துகொண்ட டில்லி அமைச்சர் லால்பகதூர் சாத்திரியார் அழகாக லாலிபாடியிருக்கிறார்! "ஐயோ, ஐயோ, யார் சொன்னார்கள்? ஆங்கிலத்தை அகற்றுவதாவது! இல்லை, இல்லை, இல்லவே யில்லை, காலவரையறையின்றி ஆங்கிலம் இருக்கும் என்று நான் உறுதி தருகிறேன்," என்று சொன்னதோடு, சாத்திரியார், நிறுத்திக் கொள்ளவில்லை. எப்படி நிறுத்துவார்? "பெண்ணே! பெண்ணே!! உன்னை இருட்டு மறைவுக்கு இழுத்துபோவது இன்பம் துய்த்து என்பசியை ஆற்றிக்கொள்ளத்தான்", என்று துணிந்தா சொல்கிறான், துரோக சிந்தையுள்ளவன்! இளிப்பான், இதோ காசு என்பான் இருட்டுப்பக்கம்கண்ணைக் காட்டுவான். ஏமாந்தவளானால், எதுக்கோ ஆசைப்பட்டுப் போய் பலியாவாள்! எதிரேயிருக்கும் தென் மண்டலங்களின் முதலமைச்சர்களை எந்த 'ரகங்களில்' சேர்த்தாரோ தெரியவில்லை, காலவரம்பின்றி ஆங்கிலம் இருக்கும் என்று சொன்னதோடு நிறுத்திக் கொள்ளாமல்,

"......ஆங்கிலம் இருக்கும். ஆனாலும் நமக்கு ஒரு பொது மொழி வேண்டாமோ? அந்தப் பொதுமொழியான இந்தியை, ஒரே யடியாக யில்லாவிட்டாலும் கொஞ்சங் கொஞ்சமாக நாம் நுழைக்க வேண்டாமோ? ஆட்சி மொழியாக ஆக்க வேண்டாமோ? என்று குறிப்பிட்டிருக்கிறார்! பால் சோறு உண்ணும் போது 'கொஞ்சங் கொஞ்சம்' பச்சைப் பாம்புக் கறியும் தின்ன வேண்டும் என்றால் என்ன பொருள்? வெண்ணிலா வீசும் போது, அதையும் அனுபவி, இதோ நெருப்பு இதன் பக்கத்திலும் 'கொஞ்சங் கொஞ்சம்' நெருங்கிவா, என்பது எதற்கு? எதிரே, நீங்களோ நானோ யிருந்தால், சாத்திரியாரைக் கேட்டிருப்போம்! இருந்தவர்கள், நான்கு மண்டலங்களையும் புரக்கும் முதலமைச்சர்கள்—அதிலும், காங்கிரஸ் கட்சி முதலமைச்சர்கள்! பளா, பளா, பேஷ், பேஷ், என்று உற்சாக மூட்டியிருப்பர் போலும் சாத்திரியாரை. அதனால், அவர், 'காலவரம்பின்றி ஆங்கிலம் நீடித்து இருக்கும்' என்றும், 'அதே சமயம், இந்தியும் கொஞ்சங் கொஞ்சமாய் ஆட்சிமொழியாகும்", என்றும் குறிப்பிட்டிருக்கிறார்!!

கொஞ்சங் கொஞ்சமாய் உன்னைச் சர்கடிப்பேன் என்றால் என்ன பொருள்?—வீரன் வாளை வீசுவான், கொல்ல! கோழை, சிரித்தபடி, நச்சு உணவைப் போடுவான் சாகடிக்க!! கோழையின் செயலைத் தந்திரம் என்போம், வீரனின் செயலை, வீரம் என்போம், வீரம் ஏது சாத்திரியாருக்கும் அவர் தாங்கும் இந்திக்கும்? ஆங்கிலத்தோடு நிற்கும் அருகதையில்லையே! 'அது' இருந்தால் சாதுர்யப் பேச்சு வரைக்குமா போவார் சாத்திரியார்-சட்டத்தில் நுழைத்து விட்டன்றோ வேறு வேலை பார்ப்பார்!!

தென்மண்டலக் கவுன்சில் கூட்டத்தில்,

"கொஞ்சங் கொஞ்சமாக இந்தியைத் தேசிய மொழியாக்க வேண்டாமோ? அதுநம் கடமையல்லவோ? நான் திணிக்கவில்லை, உங்களையே யோசனை கேட்கிறேன். ஒரு கமிட்டி யொன்று போடப் போகிறேன். எல்லா முதலமைச்சர்களும் அக் கமிட்டியில் இருந்து எப்படி இந்தியை நுழைக்கலாம் என்று எனக்கு யோசனை சொல்லுங்கள்,"

என்றிருக்கிறார். வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல என்பார்கள் நமது பாட்டிமார்! எதிர்ப்போரின் உதவியைக் கேட்டு அவர்கள் கைகளாலேயே கண்களைக் குத்திக் கொள்ளும்படிச் செய்ய தனி சாதுர்யம் வேண்டும். அத்தகைய சாதுர்யவான்களில் ஒருவராகயிருப்பதால் தான் சாத்திரியாரை இந்தவேலைக்கு அனுப்புகிறார் போலும், பண்டித நேரு! என்ன 'நைசாக'ப் பேசுகிறார் பாருங்கள். ஆங்கிலம் காலவரம்பின்றி இருக்கும் என்கிறார்! கொஞ்சங் கொஞ்சமாய் இந்தி நுழையும் என்கிறார்! அப்படி நுழைப்பதையும் உங்களைக் கலந்து கொண்டு செய்வேன் என்கிறார்!!

கலந்து செய்வேன்—கமிட்டி போடுவேன், என்றால் என்ன பொருள்? "அகோவாரும் முனிபுங்கவரே! அடியேன் கொள்ளையடிக்காமலிருக்க முயற்சிக்கிறேன், ஆனால், உயிர்வாழ வேண்டுமல்லவா? அதனால், 'கொஞ்சம் கொஞ்சம்' முயற்சிக்கிறேன். அப்படி முயற்சிக்கும்போது உங்களையும் கூட்டி யோசனை கேட்டுச் செய்கிறேன்," என்று ஒரு பலே திருடன் சொன்னால், என்ன பொருள்? முனிபுங்கவரை ஏமாளி யென்று அவன் நினைத்திருக்க வேண்டும்! அல்லது, 'முனிபுங்கவர்' வேடத்திலுள்ள ஆளுக்கும் பலே திருடனின் தொழிலில் 'கூட்டு' இருக்க வேண்டும்!!

கமிட்டி போடுவாராம்—யோசனை கேட்பாராம் எதற்கு? இந்தியைத் திணிக்க!! இன்று நாடு, இந்தியைத் திணிக்க சாத்திரியார் கமிட்டி போடவில்லை என்பதற்காகவா இந்தி வேண்டாம் என்கிறது? அல்லது, நான்குமண்டல முதலமைச்சர்களின் முத்தான யோசனைகளைச் சத்தான சாத்திரியார் கேட்காமல் செய்கிறாரே என்பதற்காகச் சண்டமாருதக் குரல் எழுப்புகிறதா? பிரச்னையின் அடிப்படையே வேறு!

நாடு கேட்கும் கேள்வி இந்தி ஏன் என்பது தான்.

நாடாளும் நான்கு மகிபர்களும் சாத்திரியாரிடம் இந்தி ஏன் என்று கேட்க வில்லை.

மாறாகக் காமராசர் சொன்னாராம், "ஆகாகா! எவ்வளவு அருமையான திட்டம். சட்டம் யாருக்கும் தீங்கில்லாமல், இந்தியை ஆதரிப்போருக்கும் திருப்தி வரும்படி, அதேசமயம் இந்தியை எதிர்ப்போருக்கும் திருப்தி உண்டாகும்படி யல்லவோ செய்திருக்கிறார்கள்!!", என்பதாக.

வாயை மூடிக் கொண்டாவது-இருந்திருக்கக் கூடாதோ! வடி கட்டின மேதாவிலாசத்தைக் காட்டா விட்டால் சாத்திரியார் என்ன சண்டைக்கா வந்து விடுவார்! நமது மாநில முதலமைச்சர் டில்லி கொண்டு வந்திருக்கிற இந்தித் திணிப்புச் சட்டத்தை வரவேற்று—மெச்சி—பாராட்டும், தெரிவித்திருக்கிறார்!; அல்லாடியின் சீடர், சர்ச்சிலின் சகா, சகல கலா வல்லவர், சட்ட நிபுணராயிருந்து, முதலமைச்சர் பொறுப்புக்காக விலகி வந்தவர்—அல்லவா, நமது காமராஜ்? இவர் பாராட்டா விட்டால், என்ன ஆவது, டில்லியின் சட்டம்! அதனால், மெச்சி-வரவேற்று-பாராட்டும் தெரிவித்திருக்கிறார்!!

இப்படிப் பாராட்டிய வரைச் சும்மா விடுவாரா சாத்திரி? தொடை நடுங்கியபடி, என்ன

தி-மு-க-
தலைமைச் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்கள்

தி. மு. க. தலைமைச் செயற்குழுக் கூட்டம், 7—6—63 காலை 10-மணிக்கு, சென்னை—நுங்கம்பாக்கம் அவனியூ ரோடு, 9-ம் எண்ணுள்ள அண்ணா அவர்களின் இல்லத்தில் கூடும்.

பொதுக்குழுக் கூட்டம் ஜூன் 8, 9, 10 ஆகிய நாட்களில், லாயிட்ஸ் ரோடு, 155-ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

'அறப்போர்' புதிய பொலிவோடு மீண்டும் பவனி தொடங்கியது காண மகிழ்கிறேன். பவனி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

தங்களின் தலையங்கம்உள்ளபடி நெஞ்சை உருக்கிவிட்டது. சகோதரனோடு பிறக்கவில்லை என்று அடிக்கடி எழுதியிருப்பது காண நெஞ்சு நெகிழ்ந்தது. நாங்கள் உடன் பிறக்காவிட்டாலும், உங்கள் சகோதரர் என்று எண்ணற்றோர் சொல்லத் துடிக்கிறார்கள் என்ற செய்தியை மட்டும் சொல்லத் துடிக்கிறது. சொல்லிவைக்கிறேன் அதை மட்டும்.

அசோகன் அச்சகம் உடனடியாக வேலை செய்ய ஏற்பாடுகள் செய்யுங்கள்.

இது நல்லமுயற்சி!

அன்புள்ள,

தில்லை. வில்லாளன்

செய்வானே,ஏது செய்வானே, என்று வரும் திருடனிடம், போலீஸ் உடையிலிருப்பவனே, "பூப்போட்ட கிளாசிலே போடண்ணே எனக்கும் அரை!" என்றால், விடுவானா? அரையென்ன போட்டுக்க ஒன்றரையென்றல்லவா, கொட்டுவான்!, அதேபோல, தன்னைக் காமராஜ் பாராட்டியது கண்டதும், லால்பகதூர் சாத்திரியார்,

"**நான்** இந்தச் சட்டத்தைக் கொண்டுவர மறைமுகமாகவும் நேர்முகமாகவும் தென்னக முதலமைச்சர்களான நீங்கள் தந்த ஒத்துழைப்புகளுக்கு என்னுடைய நன்றிகள்,"

என்று சொல்லியிருக்கிறார்! தென்னக முதலமைச்சர்கள் நால்வரில், இந்திச் சட்டம் தேவையா என்று கேட்டவர் கன்னடத்து நிசலிங்கப்பா, அவசியமில்லாதது என்றவர் கேரளத்து சங்கர், யோசித்துச் செய்ய வேண்டும் என்றார் ஆந்திர சஞ்சீவியார், ஆனால் எதுவுமே சொல்லாமல் இடித்த புளிப் போல் இம்'மென்று இருந்தவர் 'எல்லாந் தெரிந்த' நமது காமராசர்தான்!!

"மசோதா சட்டமாக ஆவதற்கு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் முதலமைச்சர்கள் ஆதரவு கொடுத்தார்களாம்"- கூறுகிறார் சாத்திரியார்! அவர் காங்கிரஸ்காரர் முதலமைச்சர்களும் காங்கிரஸ்காரர்கள் தான்.

பிறகு ஒருவருக்கொருவர்! 'நேர்முக'மாகவும் 'மறைமுக' மாகவும் ஆதரவு கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? எதிர்க் கட்சியினர் கொடுத்தால் 'மறைமுக' ஆதரவாகலாம்! அப்படி 'மறைமுக' ஆதரவு கொடுக்க வேண்டிய நிலைமைக்கு யார் ஆளானார்கள்? ஆளாக்கியது, எது?

காமராசர், எப்படியாவது சட்டம் வரவேண்டும் என் பதறகாக இங்கே கண்டித்துப் பேசாமல் ஊமையாய் இருந்தாரே அதுவா? அல்லது, இங்கிருந்து போன 'எம். பி.'க்களையெல்லாம், மசோதாவை ஆதரித்து ஓட்டுப் போடுங்கள் இல்லாவிட்டால்...... என்று ஏதாவது மறைமுகத் தகவல் அனுப்பி உதவினாரா? விளங்கவில்லை, நமக்கு! என்றாலும், நாடு இந்த 'நல்லாத்மாக்களின்' மனநிலையைப் புரிந்து கொள்ளும் என்கிற நம்பிக்கை நமக்குண்டு!!

தென் மணடலக் கவுன்சில் கூட்டத்தில் நமது தோழர் செழியன் விடுத்த அறிக்கையைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார், சாத்திரியார். அதிகாரிகள், இந்தியில் குறிப்புகள் எழுத வேண்டுமென, டில்லி உள்நாட்டிலாகா எல்லா இலாகாக்களுக்கும் சுற்றறிக்கை விடுக்க வில்லையாம்! சாத்திரியார் மறுத்திருக்கிறார்!! ஆனால் 1961 மார்ச் 27-ந் தேதியன்று உள்நாட்டிலாகா, "ஆங்கிலத்துக்குப்பதில் எப்படி இந்தியை உபயோகிக்க வேண்டும்," என்று மட்டும் உத்திரவு போட்டதாம். இதற்கு என்ன பெயரோ? இதுதானே, செழியன், கேட்பதும்!! ஏனிந்த உத்தரவு? அதுமட்டுல்ல, செழியன் அறிக்கைதவறும்! "ஆமாம்யா! நீர் தவறு என்கிறீர். ஆனால், அந்த செழியனே, நீதிமன்ற விசாரணைவை, எல்லா தஸ்தாவேஜுகளையும் கொண்டு வருகிறேன் என்கிறார். அப்படியொன்று வையுங்களேன்!", என்று காமராசர் கேட்டிருக்கலாமல்லவா? அவர் எப்படிக் கேட்கப்போகிறார்! அவருக்குத்தான், சாத்திரியார் பாராட்டியதும், தலையில் 'ஐஸ்' வைத்தது போலாகியிருக்கிறதே! இல்லாவிடில், வரவேற்று—மெச்சி—பாராட்டியிருப்பாரா, இந்திச் சட்டத்தை!!

வடமொழியால் தந்த வம்பு

வீரத்தமிழன் கோழையானான்!

விபுலானந்தரின் அறிவுரை!

யாழ்ப்பாணக் கல்லூரியில் யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டைப்பகுதி ஆசிரியர் சங்க ஆதரவில் ஆசிரியருக்கென ஏற்படுத்தப்பட்ட மகாநாட்டில் பேராசிரியர் சுவாமிவிபுலானந்த அடிகள் 1—4—45ல் ஆற்றிய சொற்பொழிவின் சாராம்சம் வருமாறு ;—

'ஆசிரியத் தொழில் மிகவும் உயர்ந்தது. கல்வியை அறிவுறுத்துதல் எங்கள் கடமை. கல்வியை வேப்பங்காய்போல கசப்பாகவும், கரும்புபோல இனிமையாகவும் மாணவருக்கு அறிவுறுத்தலாம். இது ஆசிரியரைப் பொருத்தது. சொந்த மொழியைப் பயில்வதற்கு மக்களுக்கு ஆர்வமுண்டாகவேண்டும். எனவே மாணவருக்குக் கல்வி யூட்டுவது ஆசிரியர் பொறுப்பு. ஆசிரியன் முறைப்படி கல்வி பயிற்றுங்கால் அது கசப்பாகாது. ஆசிரியரின் ஊக்கக் குறைவு அவர்களின் தவறாகும். இப்போது மேல் தேசத்தில் ஓர் ஊக்கமும் கிளர்சியும் ஏற்பட்டிருக்கின்றன. 10வது நூற்றாண்டில் சோழ சக்கராதிபத்தியம் உச்ச நிலையை அடைந்திருந்தது, வங்காளத்திலும் இன்று ஜப்பானியர் கைப்பற்றிய தீவுகளிலும் சோழ மன்னரின் கொடி பறந்தது. ஒரு காலம் ஆட்சி புரிந்துவந்தநாம் இப்போது அடிமைகளாக வாழ்கின்றோம். எஜமான்கள் அடிமைகளாகவும் அடிமைகள் எஜமான்களாகவும் மாறுவது இயல்பு. காலசக்கரம் மாறிக்கொண்டு வரும் இயல்புடையது. மனிதன் எல்லாக் கல்வியையும் மொழி மூலம் பெறுகின்றான். இந்த ஆற்றல் சன சமூகத்தில் மனிதனுக்குப் பெருமையைக் கொடுக்கின்றது. ஆங்கில மொழி வளர்ச்சியுற்றுவருவதுமல்லாமல் அம்மொழி ஆங்கிலேயரைக் கடல் கடக்கவும் செய்து வருகின்றது. ஆனால் ஒரு காலம் ஒரு உன்னத நிலையிலிருந்த எமது தமிழ் மொழி சக்தி குறைந்து வருகின்றது. இதற்குக் காரணமென்ன? என்பதை ஆராயுங்கால் மேல் நாட்டில் 'லத்தின், கிரேக்க' மொழிகளின் தொடர்பு ஆங்கில மொழிக்கு ஆற்றலைக் கொடுத்தது. வீர வாழ்க்கையை உணர்ந்த மேல்நாட்டு மக்கள் வீறுகொண்டெழுந்தனர். புத்துயிர் கொடுத்த மொழியைப் போற்றிப் புகழ்ந்தனர். ஷேக்ஸ்பியர் மில்டன் முதலிய கவிவாணர் சிறந்த இலக்கியங்களைச் சிருஷ்டித்தனர். மேல் திசை உயர் தனிச் செம்மொழிகளான லத்தீன் கிரேக்க மொழிகளே ஆங்கிலத்தை வளம்பெறச் செய்தன.

இனித் தமிழ் மொழியைக் கவனிப்போம். தமிழில் சமஸ்கிருதம் கலந்தது. இதன் பயனாக வீரவாழ்வு நடத்திய தமிழன் சாதுவானான், வடமொழி அவனுக்கு பாரமாத்தீக விஷயங்களைப் புகட்டிக்கடவுட் சிந்தனையை மிகவும் ஊட்டியது. எனவே தமிழன் கடவுளைப் பற்றிய ஆராய்ச்சியிற் கருத்தைச் செலுத்தலானான், மேலும் ஆரிய நாகரிகமே மிகச் சிறந்ததெனவும் ஏனையவை குறைந்ததெனவும் வடமொழி இலக்கியம் போதித்தது. இது காரணமாக தமிழனின் வலிமை குறையத் தொடங்கியது. ஆனால் ஆங்கிலேயருக்குக் கிரேக்க மக்களின் சரிதம் உற்சாகத்தை யூட்டி உணர்ச்சியைப் பெருக்குகிறது. மனிதன் உலகை ஆள்வதற்குப் பிறந்தவன் என்ற உண்மை அவனுடைய கண்களைத் திறந்தது. சமஸ்கிருதம் ஆற்றலைக் குறைத்து வரவே பழைய புராணக் கதைகளை நம்பும் நிலை நாட்டிலுண்டாயிற்று. சுருங்கக் கூறுமிடத்துத், தமிழனுக்கு அடிமை மனப்பான்மை வலுப்பெற்றது.

சரித்திரப் புகழ் பெறும்

தி மு க பொதுக்குழு

பற்றிய
- எல்லா நிகழ்ச்சிகள்
- தீர்மானங்கள்
- விளக்கங்கள்
- ஏராள படங்கள்

அறப்போர்
ஆசிரியர்: அரங்கண்ணல் எம். எல். ஏ.,

தனி இதழ் விலை 16 காசில்! 14—6—63 அன்று கிடைக்கும்!!
வேண்டிய இதழ்களுக்கு உடனே தெரிவிக்கவும். பில் பாக்கியுள்ளவர்களுக்கு அனுப்பப்பட முடியாது.

அறப்போர் : அபிராமபுரம் : சென்னை-18

பிரெஞ்சுப்புரட்சி!

அரங்கண்ணல்

பார்மெச்ச வாழ்ந்த அரசி பக்கத்து அறையின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருந்த நேரத்தில், மக்கள் கும்பல் அவளது அறைக்குள் நுழைந்தது! அவர்களுக்கு அரசி அங்கேயில்லை என்பது கூடத் தெரிய வில்லை. ஆத்திரத்தோடு, நுழைந்த வேகத்தில், கட்டிலைப்போய் வெட்டினான் ஒருவன், தலையணைகளை ஈட்டியால் குத்தினான். திரைச் சீலைகள்! வர்ணவிளக்குகள் யாவும் நாசமாக்கப்பட்டன. அழகோவியம் தூங்கும் அந்த அறை நாசத்தின் நர்த்தனக் கூடமாய் மாறியது!!

யாரோ அறையின் வெளித் தாழ்ப்பாளை எடுத்துவிட, அரசி பரபரப்போடு அரசனின் அறைக்கு ஓடினாள், அதற்குள் அவளது குழந்தையோடு தாதியர் அங்கு வந்து சேர்ந்தனர். இளவரசனான அவள் குழந்தை எதைக் கண்டது? சூதுவாதறியாத அந்தச் சுந்தர ரூபம், "பசிக்குது அம்மா!" என்று சிணுங்கியது. இந்த ஒரு சொல் ஆத்திரமடைந்த மக்களின் காதுகளில் மட்டும் விழுந்திருந்தால்? "பசிக்குதா உனக்கு! பார்வேந்தன் மகனே! இதேசொல்லை எமது வாயால் எத்தனை தடவைகள் உச்சரித்திருப்போம் தெரியுமா? எமது செல்வங்கள், பசிக்குது பசிக்குது என்று கதற ஒருவாய் உணவு தரவும் வழியில்லாமல் நாங்கள் வடித்த கண்ணீரின் வகை தெரியுமா? உனக்குப் பசிக்கிறதா! பசிக்கட்டும் பசிக்கட்டும்." என்று கூவியிருப்பார்கள்!!

"அம்மா பசி!" என்று சொன்ன தன் மகனைப் பொறுமையாயிருக்கும்படிப் புகன்றாள், அரசி. சூழ்ந்து நின்ற தாதியர், எங்கேயாவது தப்பியோடும்படிச் சொல்லினர். நடுங்கியபடி நின்ற அவர்களிடம், அரசி அமைதியாகச் சொன்னாள், "நான் இப்போது ஓடக் கூடாது. பாரிஸ் நகர மக்கள் என்னைக் கொல்ல வந்திருக்கிறார்கள் என்றால் கொல்லட்டும்! கணவன் அருகில் என்னை வைத்துக் கொல்லட்டும்!"

ஆபத்து எதிர் நோக்கும் சமயத்தில் அதைத் துச்சமென மதிக்கும் துணிவு, அரசிக்கும், அரசனுக்கும் ஏற்படுவதுண்டு. அவர் களிடமிருந்த ஆச்சரியமான குணாதிசயம் இது! லாபயேட்டே இச்சமயம், சிக்கலைத் தீர்க்க நுழைந்தான். பத்தாண்டுகளுக்கு முன் நடந்த அமெரிக்கச் சுதந்திரப் போரில் பெயர் பெற்ற வீரனல்லவா அவன்? அந்த வீரத்தை இப்போதும் காட்ட முன் வந்தான்!! அரசியின் அந்தப்புரத்துக்குள் நுழைந்து, மக்கள் அட்டகாசம் செய்தது அறிந்ததும் தனது, குதிரைப்படைகளோடு அரண்மனையை நோக்கி விரைந்தான்.

மென்மேலும் வெளியிலிருந்து மக்கள் வராதபடி வாயில் களில் பலத்த பாதுகாப்பு அமைத்தான். அங்கே குழுமிக்கிடந்த கும்பலை யெல்லாம் தோட்டத்தின் பக்கம் துரத்தினான். ஆத்திரப்புலி களாயிருக்கின்ற மக்களைப் பார்த்து அஞ்சாமல், அவர்களுடைய தலைவர்களுடன் பேச, அத் தோட்டத்துக்குள் சென்றான். அவர்களைப் பார்த்துப் பேசினான்.

"என்ன செய்ய வேண்டும் உங்களுக்கு?"

"உடனே அரசன். வெர்சேல்ஸ் மாளிகையை விட்டு வெளியேற வேண்டும்..."

"வெளியேறி...?"

"பாரிஸ் பட்டணத்தின் மத்தியிலுள்ள பழைய அரண்மனைக்கு வந்து வசிக்க வேண்டும்..."

"இதனால் என்ன பலன்?"

"பலனா! அங்கே பசித்த வயிறோடு வந்து பரிதவிக்கும் எங்கள் மத்தியில் வந்து வாழ்ந்தால் தான் அரசருக்கு எங்கள் நிலைமை புரியும். இங்கே சுகவாசத்திலிருக்கும் வரை, எங்கள் வேதனை புரியாது. அதனால்தான் வரச்சொல்கிறோம்."

லாபயேட்டேக்கு, அந்தச் சமயத்துக்கு இந்த யோசனை உகந்ததாகப்பட்டது. 'இருங்கள்!' என்று சொல்லி விட்டு அரசனிடம் வந்தான். அரசனும் யோசனையை ஒப்புக் கொண்டான். தங்கள் வாயாலேயே தங்கள் முடிவை மக்களுக்குச் சொல்லுங்கள் என்று தெரிவித்தான், லாபயேட்டே. மன்னனும் அரசமாடத்துக்கு மக்களைக் காண வந்தான்! கண்டதென்ன?

ஈட்டிமுனைகளில் தலைகள் தெரிந்தன! அரண்மனைக் காவலாளி களில் போராட்டத்தின் போது கொல்லப்பட்டவர்களின் தலைகளை வெட்டியெடுத்து குத்தீட்டியில் செருகிக் கொடிகளைப் போலத் தூக்கிக் கொண்டு நின்றனர், மக்கள்!! அரசனின் அங்கமெல்லாம் நடுங்கிற்று. ஆத்திரமடைந்திருந்த மக்களோ; அரசனைக் கண்டதும் வெற்றி பெற்றோர் போல அந்தத் தலைகளை ஆட்டி ஆட்டிக் காண்பித்தனர். ஆனால் யாரோ ஒருவன் உற்சாகத்தோடு, "மன்னர் நீடூழிவாழ்க!" என்று கத்தினான். உடனே, மக்களும், வாழ்க! வாழ்க!! என்று முழக்கமிட்டனர். இதனால் தான் பாமர மக்களின் மனதை மெழுகுக்கு ஒப்பிட்டார்கள் போலும்!!

அரசனுக்குக் கொஞ்சம் தெம்பு வந்தது. பக்கத்தில் நின்றிருந்த அரசியையும் 'பால்கனி'க்கு வரச் சொன்னான். தனது மகனான இளவரசன், ஒரே மகள் ஆகியோரோடு அரசமாடத்துக்கு வந்து நின்றாள்.

"குழந்தைகள்! சேச்சே குட்டிச் சாத்தான்கள் ஒன்றுகூட

(10—ம் பக்கம்பார்க்க)

(4—ம் பக்கத் தொடர்ச்சி)

எப்பொழுதோ அல்ல; ஏப்ரல் 21ந்தேதி.

தி. மு. கழகத்தின் பிரிவினைக் கொள்கைக்கு ஆதரவாக 34 லட்சம் வாக்குகள் விழவில்லை. தப்புப் பிரச்சாரத்திற்காகவும் ஆச்சாரியார் ஆதரித்ததாலும் முஸ்லிம்லீக் ஆதரித்ததாலும் தான் 34 இலட்சம் வாக்குகள் விழுந்தது. பிரிவினை கொள்கையை மக்கள் ஆதரிக்கவில்லை என்று பேசியதும் நீங்கள் தான். தடைச் சட்டம் கொண்டு வருவதும்நீங்கள் தான். ஏன் தடைச் சட்டம்? 15 வருடக் காலமாக பிரிவினைக் கொள்கைப் பற்றி பேசி வந்தோம். இப்பொழுது மட்டும் திடீரென்று தடை செய்ய காரணம் என்ன? எந்த காரியத்தை செய்தாலும் காரணம் வேண்டும். நல்லதோ—கெட்டதோ, வல்லதோ—வலிவற்றதோ, சிறியதோ—பெரியதோ எதைச் செய்தாலும்காரணம் வேண்டும்.

இந்தத் தெருவில் போகக் கூடாது, ஏன் போகக்கூாடது என்று கேட்டால் ரோடு பழுது பார்க்கப்படுகிறது. அதனுல் போகக்கூடாது. கொத்தவால் சாவடி பக்கத்தில் கைவண்டி ஏராளம். ஆகவே அந்தப் பக்கம் போகக்கூடாது என்று சொல்வதுசரி.

நீங்கள் எதையும் சொல்லலாம். ஏனென்றுல் நீங்கள் சொல்ல வேண்டிய இடத்திலிருந்து சொல்கிறீர்கள்—நாங்கள் கேட்க வேண்டிய இடத்திலிருந்து கேட்கிறோம்.

இல்லைஅண்ணுத்துரைபலாத்கார வழியில் செல்கிருர் என்ருவது சொல்ல முடியுமா? சௌகார்பேட்டையிலிருக்கும் 30 மார்வாடிக் கடைகளில் கொள்ளையடித்தார்களா? 8 குஜராத்திகளின் தலையை வெட்டினுர்களா? எங்கள் தோழர்கள் அராஜக முறையில் சென்ருர்களா? தி. மு. க. வன்முறைச் செயல்களின் கட்சித் தொண்டர்களை அழைத்துச் சென்றதாக இல்லையே, நான் சட்ட பூர்வமாக அரசியலை அடக்க ஒடுக்கமாக அற நெறியுடன் நடத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன் 1942 ஆகஸ்டு கலவரத்தைப் போல்நான் மேற்கொண்டேன் என்று சொல்ல முடியுமா? அப்படி நடத்த விரும்புபவனல்ல, நான்;நடத்தமுடியாதவனல்ல; நடத்த முடியும்; நாகரீகமான அரசியலை நடத்த விரும்புகிறேன்.

ஆந்திர மாகாணத்தைப் பிரிக்க வேண்டுமென்று ஆந்தி

(10-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்துகிறோம்!

நமது பாராளுமன்ற உறுப்பினர் தோழர். சே. கந்தப்பன் எம். ஏ., அவர்களுக்கும் தோழியர் சாரதாமணிக்கும் இந்தக் கிழமை அறிஞர் அண்ணு தலைமையில் திருமணம் நடைபெற்றது. இயக்க முதல்வர்கள் பலர் பேசினுர்கள். வாழ்க கந்தப்பன்—சாரதரமணி என வாழ்த்துகிறோம்.

இல்லற வாழ்க்கையில் பலஹீனமா?

வாலிபப் பருவத்திலே வயோதிகத் தன்மையா?

உடலில்பலக்குறைவு சக்தி குறைவா?

அப்படி இருந்தால் நீங்கள் இனி கவலைப்படத் தேவையில்லை.

பிரபல சித்த வைத்தியர்

டாக்டர் எஸ். ஆர். சிவராஜ்

அவர்களின் தயாரிப்புகளான

‘சிவராஜ்’ ராஜாமிர்தம் (காலை, மாலை உள்ளுக்கு)
சிவராஜ்’ ராஜ்பில்ஸ் (காலை, மாலை உள்ளுக்கு)
‘சிவராஜ்’ தாமரைத் தைலம் (ஸ்நானத்திற்கு)
சிவராஜ்’ லேபனத்தைலம் (மேல்பூச்சு)

இவைகளைத் தொடர்ந்து சாப்பிட்டு இழந்து போன சக்தியை மீண்டும் பெற்று வாழ்க்கையில் புத்துணர்ச்சி பெறலாம்.

1 மாதம் உபயோகிக்கும் மருந்துகள்
4-ம் சேர்ந்தது ரூ. 23-00

(தபால் செலவு ரூ. 2-50 தனி)

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

சிவராஜ் சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

சிவதாபுரம் அஞ்சல் :: சேலம்-2

ஆங்கிலமும் இந்தியும்

“ஆங்கிலமா? செச்சே! அது, கூடாது. தேசிய மொழியை விட்டு அதனைக் கற்பது அழகாமோ! ஆகாது. ஆகாது”, என்று நிமிர்ந்த நெஞ்சுடன் வாதிடும் ‘பெரியவர்கள்’ வடநாட்டில், ஏராளம் இருக்கிருர்கள். ஆங்கிலத்தை வெறுப்பதே, தமது தேசபக்தியின் அடையாளம் என்று கருதுகிருர்கள் இவர்கள், இதனுல் எதுவும் அற்றஇந்திக்கு ஏற்றம் அளிக்கவும், அதையே இப் பூபாகத்தின் ஒரே மொழியாககவும் ஆர்வமும் ஆசையும் காட்டுகிருர்கள். ஆங்கிலத்தால் இந்திய உபகண்டத்து மக்கள் பெற்றுள்ள ஏற்றங்கள் சாதாரணமானவையல்ல. வெளியுலகில்பரவிய விஞ்ஞான சாதனைகளும் அறிவுக் கருத்துக்களும் ஆங்கிலம் இன்றேல் இந்தக்கண்டத்துக்குள் நுழைந்திருக்க முடியாது. சாக்ரடசின் திருநாமமும், மார்ட்டின் லூதர் செய்த மறுமலர்ச்சியும் மார்க்சின் சிந்தாந்தம், கூட்டுறவு முறையுப் மின்சார விளக்கும், ஓடும் இரயிலும் பாடும் ரேடியோவும், அவைகளைப் பற்றிய விளக்கங்களும் ‘ஆங்கிலம் ’இல்லாதிருப்பதால் இங்கு தோன்றியிருக்க முடியாது. அன்று மட்டுமல்ல, இன்றும் உலக மேடையில் ஆங்கிலம் பெற்றிருக்கும் இடம் சாதாரணமானதல்ல! அரசியல் துறையினருக்கும்சரி! விஞ்ஞான பெருந்தகைகளுக்கும் சரி, அம்மொழியே தத்தம் எண்ணங்களைப் பரிமாறி கொள்ளவும், தாம் கண்டவைகளை எடுத்துரைக்கவும் பயன் பட்டு வருகிறது.

பிரெஞ்சு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அரச பரம்பரையில் உயிரோடு இருக்க விட மாட்டோம்!!'', என்று யாரோ ஒருவன், கூட்டத்திலிருந்து கத்தினுன். அரசியைக் கண்டதும், முன்பிருந்த நிலை மாறி கூட்டத்தில் கொஞ்சம் சலசலப் பேற்பட்டது. அவள், பிரஞ்சு மாதல்ல! ஆஸ்திரியா நாட்டு இளவரசியாயிருந்து பிரஞ்சு ராணியானவள்! அதனுல், அவளை "வெளிநாட்டுக்காரி' என்றே மக்கள் கருதினர். அரசன் கெட்டதற்கும், அரசபீடம் சீர்கேடுற்றதற்கும் அவள்தான் காரணம் என்பது எல்லோருடைய கருத்தாகும். "ரொட்டி! கொடு!! என்று கேட்ட மக்களைப் பார்த்து, "ஏன் ரொட்டியில்லை யென்ருல் 'கேக்' சாப்பிடுவது தானே?", என்று கேட்கிருள் ராணி, என்றெல்லாம் அவளைப்பற்றி வெளியான துண்டுப் பிரசுரங்கள் சொல்லியிருந்தன. அதனுல், அவள் என்ருல் ஆத்திரம்.

தன்னைக் கண்டதும் பாம்பு போல மக்கள் சீறுவதைக் கண்ட அரசி மேரி அன்டாய்னட், அரசனையும் குழந்தையையும் நகரச் சொன்னுள். அரசியைத் தனியே விட்டுச் செல்ல அரசன் யோசித்தான். அரசி வற்புறுத்தவே, வேண்டா வெறுப்போடு சென்ருன். அரசி மட்டும், புலிகளின் எதிரே புள்ளிமானைப் போல நின்ருள்! கூட்டத்தில் நின்ற ஒருவன் அரசியைக் குறிபார்த்துத் துப்பாக்கியைத் தூக்கினுன்!!

(தொடரும்)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ரர்கள் தண்டவாளத்தைப் பெயர்த்தார்கள். ரயிலைக் கொளுத்தினுர்கள், ஆனுல், எங்களால் ஒரு குஜராத்திக்கு அல்லது ஒருமார்வாடிக்காவது சுண்டு விரலில் ரத்தம் வந்திருக்குமா? வந்திருக்கலாம். கதவைத் தாழ்ப்பாள் போடுகின்றபொழுது கதவிடுக்கில் சுண்டு விரல் மாட்டி ரத்தம் வந்திருக்கும், நாட்டில் நிலைமை இவ்வாறிருக்க தடைச்சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்களே ஏன் என்ருல் காரணம் கூற முடியாது என்கிருர்கள். முடியாது என்று கூறுவது சர்வாதிகாரத்தனமாகும். ஜனநாயகத்தில் எதற்கும் காரணம் கேட்க உரிமையுண்டு. சர்வாதிகாரிகள் சரிந்த வரலாறுகளை படித்திருக்கிருேம்,

அமெரிக்காவில்நீக்ரோக்கள் வாழும் பகுதியை தனியாக பிரிக்கவேண்டும். எங்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் எந்த வித தொடர்பும் தேவையில்லை என்பதை விளக்கி நீக்ரோ இனத்தைச் சேர்ந்த ஒருவர் புத்தகம் ஒன்று எழுதினுர். நீக்ரோக்கள் வாழும் பகுதியை தனியாகப் பிரித்து படமும் அதில் வெளியிட்டிருந்தார்.

இதையறிந்த ஆங்கில அரசாங்கம் பலாத்காரத்தைத் தூண்டியதாக குற்றம் சுமத்தி 18 வருடங்கள் கடுங்காவல் தண்டனை விதித்தது. அமெரிக்க உயர் நீதி மன்ற நீதிபதிகள்—தன் இன மக்களுக்காக உரிமைக் குரலெழுப்பியது குற்றமல்ல; அரசாங்கம் தண்டனை விதித்தது குற்றம் என்று தீர்ப்பு வழங்கினுர்கள். அதைப் போல் நான் வழக்கு போடமாட்டேன். யாரும் போடமாட்டார்களென்றும் உறுதி தர மாட்டேன். அப்படியாராவது வழக்கு போடுவார்களேயானுல் அதன் மூலம் மறைந்து கிடக்கும் பல நிகழ்ச்சிகள் உலகிற்குப் புலப்படும். பேச்சுரிமையைக் கட்டுப்படுத்துவதுதான் சட்டத்தின் நோக்கம்என்கிருர்கள். கட்டுபாடு தேவைதான் காட்டாற்றிற்குரிய கட்டுபாடு அணை இருந்தால்தான் பாசனத்துக்குப் பயன்படும் இல்லாவிட்டால் உபயோகமாகாது. அதிக கட்டுப்பாடு இருந்தால் அணையே உடைபட்டு நாடு பாழாகும்.

பேச்சுரிமையை கட்டுப்படுத்தக் காரணம் இன்றி உரிமையைப் பறிக்கும் கட்டுப்பாடு இந்தியாவின் ஜனநாயக ஆட்சியை உலக நாடுகள் அறிந்தால் காட்டுமிராண்டி ஜனநாயகம்நடத்துகிருர்கள்என்று எண்ணுவார்கள். மெஜாரிடி பலத்தால் எதையும் செய்வது அறிவுடைமையாகாது. அறிவீனமாகும். ஆகவே நாம் எடுக்க வேண்டிய முடிவுகளை பொதுக்குழு நன்கு ஆய்ந்தறிந்து நீங்கள் எல்லாம் மகிழத்தக்க வகையில் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

நீங்கள் எந்த வேலை செய்தாலும்...

செய்யும் வேலை
நாட்டிற்காக
செய்யப்பட்டதாகும்

திறமை, பலம், இதற்காக பாடுபட்டு வரும் இந்தியாவின், நீங்கள், உங்கள் வாழ்வு, செய்யும் வேலை ஒவ்வொன்றும் ஒரு அங்கமாகும். திறமையில்லாமை, மரியாதை இல்லாமை ஆகியவைகளுக்கு இடமே கிடையாது. உங்கள் வேலை எதுவாக இருந்தாலும் அதை திறமையுடன் செய்யுங்கள். தாமதத்தை தவிருங்கள். சுமுகமாக செயல்படச் செய்யுங்கள். நம் செயல் திறன் உயர உறுதியுடன் உழைத்து வெற்றிக்கான வழியை வகுப்போம்.



உறுதியாக உழையுங்கள்
அதிக உற்பத்திக்கும், பலமான பாதுகாப்புக்கும் அது தேவை
DA 62/F 9

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கப் பயன்படுவாரா! சாவன்தான் பெரியதலைவராக முடியுமா!!

இன்று பண்டித நேரு அவர்களாலேயே கட்சிக்குள் வரும் பூசல்களைக் குறைக்க முடியவில்லை. பார்லிமெண்டரி காங்கிரஸ் கட்சியின் தலைவர் பண்டித நேரு. அவருக்கு அடுத்தபடியாக ஒரு துணைத் தலைவரானால். இந்தியாவில் பண்டித நேருவுக்கு அடுத்தபடியானவர் என்று கருதப் படுவர். இதனால் 'எனக்கு உனக்கு'என்று அந்தப் பதவிக்கு சண்டைகள் மூளவே இரண்டு துணைத் தலைவர்கள் இருக்கலாம் என்று இப்பொழுது வைத்திருக்கிறார்கள்!!

பெரிய காங்கிரசுத் தலைவர்களானவர்களுக்குப் பதவியிலிருக்க வேண்டும் என்று ஆசை. அதனால் எம். பி.,யாகவும் எம். எல். ஏ., ஆகவும் ஆகி மந்திரிகளாகி விடுகிறார்கள்! அப்படியானதும் அவர்களுக்கும் காங்கிரசுக்குமுள்ள தொடர்பு தொலைந்து விடுகிறது. அடித்த வரையில் சான்சு!—என்று அவர்களெல்லாம் போய்க் கொண்டிருக்கும் போது, எப்படி அந்த இயக்கம் உருப்படும்? பண்டித நேரு போன்ற ஒரு சிலரைத்தவிர, சுயநலம் கலவாத ஒரு ஆளை அந்த இயக்கத்தில் இன்று காட்ட முடியுமா!!

0 0 0

"எனக்கு மந்திரியைத் தெரியும்........"

"பி. சி. சி. (பிரதேச காங்கிரஸ்கமிட்டி) மெம்பரா அவர் ஆனப்போ, நான்தான் ஓட்டு வாங்கிக் கொடுத்தேன்"

"நான் சொன்னால் எதுவும் கேட்பார்!"

இப்படிச் சொல்லிய வண்ணம், சர்க்கார் காரியாலயங்களில் வட்டமிடுவதுதான் இன்றைய காங்கிரஸ்காரர்களின் நித்ய வேலையாகி விட்டது. ஏஜெண்டுகள்! புரோக்கர்கள் என்பார்களே அதுபோல, காரிய சாதனைக்குப் பயன்படும் வழிகளாகி விட்டார்கள், காங்கிரஸ்காரர்கள்.

அவர்கள்சொன்னதை நிறைவேற்றிக் கொடுத்தால் மந்திரிகள் பிழைத்தார்கள்! இல்லையானால், திண்டாட்டம்தான்!!

உதாரணத்துக்கு ஆந்திராவை எடுத்துக் கொள்ளுங்கள். முதலமைச்சர் சஞ்சீவரெட்டி முன்னாள் காங்கிரஸ் தலைவர்! முன்னாள் முதலமைச்சரான சஞ்சீவய்யா இந்நாள் காங்கிரஸ் தலைவர்!!—இரண்டுபேருமே, முட்டிக் கொள்கிறார்கள் இன்று. பதவிதான் காரணம் என்கிறார்கள்! 'சஞ்சீவய்யா' 'குரூப்'புக்குச் சரியான மந்திரி பதவிகள் கொடுக்கவில்லையாம் சஞ்சீவரெட்டி. பெரிய இடத்தின் நிலை இது!!

இப்படியெல்லாம் வரும் என்றுதான் காந்தியடிகள் காங்கிரசை கலைக்கச் சொன்னார் போலிருக்குறது. இந்தக் காங்கிரஸ் எத்தனை நாளைக்கு வாழ முடியும்? அதற்கு அந்திய காலம் நெருங்குவதால், சட்டங்களால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் துடிக்கிறது!

எதிர்க்கட்சிகளை மட்டந்தட்ட காமராசர்களை தயாரிக்கிறது! தூண்டி விடுகிறது!!
இது எத்தனை நாளைக்கு?—

அண்ணா சொல்கேளீர்!

மார்க்கெட்டுக்குச் சென்று கோழி வாங்கிவருகிறவர்கள், கோழியின் தலையைப் பிடித்து தூக்கிவருவதில்லை; கால்களைக் கட்டித் தூக்கி வருகிறார்கள். அதே போல்' வாத்தை காலைப் பிடித்துத் தூக்கிவருவார்கள். உயிர்ப் பிராணிகளைத் தூக்கிவருவதிலேயே சில முறைகள் உண்டு.

வயிற்றுவலிக்கு உள்ளுக்கு மருந்து சாப்பிடுவார்கள் ; தலைவலிக்குத் தைலம் தடவி விடுவார்கள், நச்சுக் காய்ச்சலுக்கு ஊசி போடுவார்கள் ; இப்படி, நோய்க்கு மருந்து கொடுப்பதிலும் முறை உண்டு! வேட்டை முறையிலும் பலவகை உண்டு!

அதேபோல், ஆள்வோரை எங்கே சந்திப்பது என்பதற்கு வழி இருக்கிறது.

வேறு கட்சிக்காரர்களும் கைவிரல்விட்டு எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்- "மே போச்சு; சூனில் போராட்டம்; சூலையில் தி. மு. கழகம் அழிந்துவிடும் நாம் வாழ்வோம்" என்று!

நாங்கள் உள்ளே போகிறபோது, எங்கள் தோழர்களை உங்களிடம் வரவர வழி செய்துவிட்டாப் போவோம்

மலேயாவுக்கு நான்கு மாதம் வேலை செய்யப் போகிறவன், மகனை அழைத்து, 'மகனே, நன்றாகப் படி' என்றும்; மனைவியை அழைத்து, 'கவலைப்படாதே' என்றும் கூறிவிட்டுப் போவான்; 'அவர் திரும்பி வரட்டும், வரட்டும்' என்று குடும்பத்தாரும் காத்திருப்பர் !

மலேயாவுக்குப் போகிறவனும் போவான்; அவன் திரும்பி வருகிறவரை வீட்டிலுள்ளோர் அவன் குடும்ப நலனைக் காத்து வருவார்கள் இதற்குமேல் விளக்கத் தேவையில்லை !

ஏணி மேலே ஏறுகின்றவர்கள் தோளில் துண் போடமாட்டார்கள். தலையில் எடுத்துக் கட்டிக் கொள்வார்கள்;

குளிக்கப் போகும்போது பெரிய துணியை களைந்து சிறிய துணி உடுத்திக் கொள்வார்கள்!

ஆற்றில் குளிக்கும்போது கை கால்களை அசைத்து நீந்துவார்கள் கிணற்றில் குளிக்கும்போது நின்றபடியே குளிப்பார்கள்.

ஃ

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யொரு பிரச்சினையிலாத போதே நீ இட்டுக்கட்டி பதிலும் சொல்வது உன் அந்தரங்க விருப்பத்தையன்றோ காட்டுகிறது? அந்தோ, கவிஞனே கண்ணதாசா, உன்னைச் சிறுபிள்ளையென்பாரே இன்றும் எம்தலைவர், சூதுவாதறியாதவன்என்பாரே உள்ளன்போடு! உன் மனதில் எங்கிருந்து வந்தது இந்த நச்சு நினைப்பு?

"தமிழ் நாட்டின் மீதும் தமிழ் மக்களின் மீதும் உள்ள பற்றைவிட தனது உயிர்மீது இவ்வளவு ஆசை வைத்துக் கொண்டிருக்கிற அண்ணாதுரை இதற்குப் பதிலாகக் கழகத்தையும் அரசியலையும்உதறிவிட்டு இல்வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவது சாலச் சிறந்தது."

கவிஞரின் பேச்சு இது! இதற்கு அடிப்படை, யாரோ டாக்டர் சொன்னதாகஇட்டுக் கட்டிக் கொண்ட கற்பனை!!

ஏன் தெரியுமா கவிஞருக்கு கோபம் வருகிறது? செயற்குழுவைக் கூட்டுகிறேன், பொதுக் குழுவைக் கூட்டுகிறேன்என்றுஉடனேபோராட்டத்தைக் கூட்டாமல் அண்ணாத்தாமதிக்கிறாராம்! டாக்டர் சொல்லி விட்டாராம்-அதனால் அண்ணா தயங்குகிறாராம்!!

வாய்விட்டுச் சிரிப்பார்கள் எவரும்!பச்சையாகத்தோன்றி உடனே சிகப்பாக மாறும் குணம் பச்சோந்திக்கு உண்டென்பார்கள். கவிஞன் உள்ளமும் கபோதியின் மனமும் ஒரே சமயத்தில் ஒருவரிடம் இருக்கும் அதிசயத்தை நாம் மனித உருவிலும் காண முடிகிறது.

நாம் போராட்டம் துவக்கினால் வருவாரா கவிஞர்? வீடு வாசல் துறப்பாரா! ஏன் ச்ம்பத்தை அன்று விட்டீர்? தமிழால் வாழும் நீரல்லவா அன்று முன்னே குதித்திருக்க வேண்டும்!!

தி. மு. க. போராட்டம் துவக்கும் என்று டில்லிப் பார்லிமெண்டில் எமதரும் தலைவர் எச்சரிக்கை விடுத்து, அது எல்லா ஏடுகளிலும் வந்து நாடே இன்று அதைப் பற்றி பேசும்போது, அது கூடத் தெரியாமல் கவிஞர் இருப்பது அவருடைய குற்றமல்ல; அவருடைய குணம் போகும் வழியின் குற்றம்! அண்ணாவின் சாவைப்பற்றி நினைப்பதும், 'சண்டியர்'போல் பாய்வதும், 'சமயம் வரும்போது ஒதுங்கிக் கொள்வதும், செச்சே,செச்சே! செச்சே! தமிழால் வாழ்பவர்களுக்கு நல்லதல்ல!!

0

கவனிக்க!

மின் சப்ளையின் காரணமாக 48, பீட்டர்ஸ்ரோடு ராயப்பேட்டை சென்னை-14-ல் அமைக்கப் பெற்ற அறப்போர் அலுவலுகமும், அசோகன் அச்சகமும் 9-ஏ, டாக்டர் சி. பி- ராமசாமி ரோடு, அபிராமபுரம் சென்னை-18 என்கிற முகவரிக்கே மாற்றப்பட்டு விட்டது. விரைவில்அசோகன் அச்சகம் மின்வசதியுடன் இயங்கும் ஏற்பாடுகள் நடக்கின்றன.

பொறுப்பாளர்
'அறப்போர்'

கேள்வி பதில்

கே: வடநாட்டுத் தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வியடைந்தது போல நாங்குனேரியிலும் தோல்வியடையாதது தமிழ் நாட்டில் அதற்குள்ள செலவாக்கைத் தானே காட்டுகிறது?

கபிலன்
நெல்லை

ப: "நாங்குனேரியில் வெற்றி பெற்றது காங்கிரசல்ல! பீடி!!", என்கிறார் போய் வந்தவர். வடநாட்டு சேட் போல பெயர் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு பிரபல முதலாளியும், இன்னும் அவரைப் போலப் பலரும் காமராசருக்காக என்னென்னவோ செய்தார்களாம்! தமிழ் நாட்டில் காங்கிரசை விட காமராசரைக் காப்பாற்றுவதற்கென்று பல பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை உருவாக்கி வைத்திருப்பதால் தான் காமராசரால் காலம் தள்ள முடிகிறது! வேறு மாகாணங்களை விடத் தமிழகத்தில் தேர்தல் சமயங்களில் 'சாதி' வேகமாக நுழைக்கப்படுகிறது. இந்தக் கைங்கரியத்தையும் காந்தியின் சீடர்கள் செய்கிறார்கள், வெற்றிக்காக எனும் போது தான் நமக்கு வேதனையாகயிருக்கிறது!!

0 0 0

கே: போடி நாயக்கனூரில் ஏன் இவ்வளவு கலாட்டா?

மாருதி
வத்தலகுண்டு

ப: கலாட்டா எதுவுமில்லை! கட்சி வேட்பாளர் இல்லாததால் கருத்தலைகள் எழும்பியிருக்கின்றன. அதைப் பெரிது படுத்தி பத்திரிகை விற்பனையை அதிகப் படுத்துகிறார் ஆதித்தனார்!!

ஃ ஃ ஃ

கே: அமைச்சர் பக்தவத்சலம் தேர்தல் தீர்ப்புக்காக இங்கேயிருக்கக் கூடாது என்று திடீரென அமெரிக்கா செல்கிறார் என்கிறேன். உங்கள் கருத்து என்ன?

கலைமான்
கீழ்விசாரம்

ப: அப்படி வெளிப்படையாகச் சொல்ல என்னிடம் ஆதாரங்களில்லை.

0 0 0

கே: பெண்களின் கண்களை எதற்கு ஒப்பிடலாம்?

சுகுமார்
கோலார்

ப: என்னைப் பொறுத்த வரையில் சில வேளைகளில் குற்றாலம் அருவி; வேறு சில வேளைகளில் இடியும் மின்னலும் நிரம்பிய மழை ஊற்று!!

0 0 0

கே: பண்டித நேருவுக்குப் பின் யாரிருக்கிறார்கள்?

சிங்கதாசன்
தேனீ

ப: 'இந்தியா'வே யிருக்காது!

0 0 0

கே: அண்ணா வீட்டில் கலியாணமாமே!

ப: ஆம்! பரிமளத்துக்கு

ஃ ஃ

கே: இந்தோனேஷியத் தலைவர் டாக்டர் சுகர்னோ தன்னை வாழ்நாள் முழுதும் குடியரசுத் தலைவராக (சர்வாதிகாரியாக) பிரகடனப் படுத்திக் கொண்டிருக்கிறாரே. உங்கள் கருத்தென்ன?

சோலை
மதுரை

ப: கடந்த போருக்குப் பின் விடுதலைபெற்றபல நடுகளில் கிளர்த்தெழுந்த அரசியல் தலைவர்களுக்கு இப்படியொரு ஆசை வந்து விட்டது! அப்படியெல்லாம் பண்டித நேருவுக்கு வராததால் தான் அவரை நாம் ஜனநாயகவாதி யென்கிறோம். உண்மையில் மிக மிகத் தவறான போக்கு இது! பண்டிதருக்குப் பின் உருவாகும் காங்கிரஸ் தலைவர்களும், சுகர்னோ, அயூப்கான் பாதையில் தான் போக முயலுவர்.

ஃ



11 ஆண்டுக்கு முன் கைதி!
இன்று அவர் நாட்டுப் பிரதமர்!!

அக்கிரமத்தை எதிர்க்கும்போது அடி! உதை! சிறை கடும் தண்டனை! எல்லாம் வரும்; மிரட்டும்.

அதையெல்லாம் தாங்கி, எதுவரினும் சரி, என் கொள்கைக்குப் போராடுவேன் என்கிற உறுதியோடு இருப்பவர்களே, கடைசியில் வெல்வர்.

11 வருடங்களுக்கு முன்பு ஒருவெள்ளைக்காரநீதிபதி அவரைத் தண்டித்து சிறைக்கு அனுப்பினார்! 2 வருடத்துக்கு முன்பு ஒரு வெள்ளைக்காரக் கவர்னர் அவரை, "இருட்டின் தலைவன். சாவின் சின்னம்! துரோகி!" என்று வர்ணித்தார்.

ஒன்பது வருடங்கள், சிறையிலேயே கிடந்தார், சிங்கமென! சாவுவரையில் நீ கிடப்பாய் என்று கேலி பேசினர் ஆண்டோர்!!

கென்யாட்டா எனும் பெயர் கொண்ட 73 வயதான அந்த மாவீரர், இந்தவாரம், எந்தநாட்டுச் சிறையில் அடைபட்டு வதைபட்டாரோ அந்த நாட்டுக்கே பிரதம மந்திரியாகியுள்ளார்.

ஆபிரிகாவிலுள்ள கென்யா நாட்டுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதன் விளைவாகப் பொதுத்தேர்தல் நடந்தது. ஜோமோ கென்யாட்டாவின் 'கனு' எனும் பெயர் கொண்ட கட்சிக்கு பெருத்த மெஜாரிடி கிடைக்கவே, கென்யாட்டா அழைக்கப்பட்டார்!

தூற்றிய வாய் புகழ்ந்தது! வெறுத்த வெள்ளையரின் நேசக் கரம் நீண்டது.

"துரோகி"—எனத் தூற்றப் பட்டவர் "ஆனரபுள் பிரைம் மினிஸ்டர்!", ஆகி விட்டார்!!

திருமணம்

நாகை தாலுகா தி. மு. க. செயலாளரான வாழக்கரை தோழர் இராசகோபாலின் இளவல் ராசாமாணிக்கத்துக்கும் செல்வி வனஜாவுக்கும் இந்தக் கிழமை அறிஞர் அண்ணா தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர். அன்பழகன், கலைஞர் மு. க., அரங்கண்ணல் எம். எல். ஏ., ப. நாராயணசாமி, ஜி. பராங்குசம், சி. வி. இராசகோபால், காட்டூர் ராமையா, மற்றும் பலர் பேசினர். மாலை மதுரை சோமுவின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது! வாழ்க மணமக்கள்!

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 9-ஏ, சர். சி.பி. ராமசாமி ரோடு, அபிராமபுரம், சென்னை-18.
அச்சிட்டோர் : எம். பி. சத்தியமூர்த்தி, முல்லை அச்சகம், 3-40, மவுண்ட்ரோடு, சென்னை-6